வார இதழ்
# தேசியம்
THESIYAM
www.thesiyamnews.com
மலர்: 02 | ...6 | வள்ளுவர் ஆண்டு 2054 | 25.01.2024 - 31.01.2024 | ஊக்குவிப்பு: 80/=

Smart Fly
ARUN WINGS
TRAVELS & TOURS
கடவுச் சீட்டு / வீசா சேவை / ETA வீசா / பயணக் காப்பீடு
விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்
ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd
143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680
arunwingslanka@gmail.com



# தமிழ்த் தேசியப் பயணத்தை நோக்கிய சிறீதரனின் பாதை...

06

# ஓரணியில் ஒன்றுபடுவோம்!

## தமிழரசின் புதிய தலைவர் சிறீதரன் அழைக்கின்றார்!

03



## ஈழத் தமிழரது மக்கள் இறைமையும் தமிழ் பொது வேட்பாளரும்!

15

பேராசிரியர் கே.ரீ. கணேசலிங்கம்

## உலக நீதி

காசாவும் முள்ளிவாய்க்காலும்

08



## ஈழத் தமிழர் கலாசாரம் என்னை மாற்றியது!

நடிகை ரம்பா யாழில் நெகிழ்ச்சிப் பேட்டி

14

தேசியம் THESIYAM www.thesiyamnews.com
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



# தமிழ்த் தேசியம் பலப்படுதலொன்றே காலத்தின் தேவை?

தனிப்பட்டகோப தாபங்களையும், வெப்புசாரங்களையும் காண்பிப்பதற்கான தருணம் இதுவல்லவென்பதை யாவரும் அறிந்து அல்ல, உணர்ந்து கொள்ளவேண்டும். தேசியம் என்பது உணர்வு ரீதியானதே! அந்த உணர்வினை சரியாகக் கைக்கொள்ளவும் கையாளவும் தெரியாதவர்களுக்கு அதனைப்பற்றி புரிந்து கொள்ள முடியாது என்பதே ஜதார்த் தம். தற்போது தமிழ்த் தேசியம் பற்றிப் பேச முனைபவர்க ளின் நிலையும் இதுதான்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் புதிய தலைவராக சிவ ஞானம் சிறிதரன் ஞாயிற்றுக்கிழமை தெரிவு செய்யப்பட்டார். அந்தத் தேர்வில் போட்டியிட்ட மற்றையவருக்கு எதிரான, சிறிதரனுக்கு ஆதரவான வாக்குகளைத் தவிர்ப்பதற்காக கட்சியின் நடைமுறைகள் மீறப்பட்டும் இருந்ததாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. தமிழரசுக் கட்சியின் வரலாறு சரியாகத் தெரியாதவர்கள் பலர் அதன் பெருமைகளை அடுக்கிக் கொண்டு செல்வதும் நடைபெற்றுக் கொண்டிருக் கிறது.

இருந்தாலும் தமிழர்களுடைய அரசியலை, மக்களது அரசியலுரிமைக்கான அரசியலை யார் முன்கொண்டு செல்ல வேண்டும் என்பதனை தமிழர்களுடைய எதிர்கால அரசியல்வாதிகளாக மாறவிருக்கின்ற தற்போது அரசியலைச் செய்து கொண்டிருக்கின்றனவர்கள் தீர்மானித்தமையானது, சுயநலன்களுக்கப்பால் மக்களுக்கான அரசியல் தேவை என்பதும் முதன்மைப்படுத்தப்பட வேண்டும் என்பதும் நிரூபிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளலாம்.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அனைவரும் ஒரே நோக்கத்திற்காகவே போராடத் தொடங்கியிருந்தனர். சகோதர இயக்க எதிர்ப்பு, படுகொலை கள் ஆரம்பிக்கப்பட்டதன் பலனாக உருவான பல விரோதச் செயல்கள் பலராலும் மறக்கப்பட முடியாதவை என்பதனை யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனால், 2001ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மறப்போம் மன்னிப்போம் என்ற நிலைப்பாட்டினை எடுத்ததன் பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இதனை அறியாதவர்கள் இன்றைய காலங்களில் தமிழ்த் தேசியம் பற்றிப் பேசுவது வியப்பாக இருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பென்ற தமிழர்களுக்கான அரசியல் பொதுக்குரலை தொடங்கிவைத்த பிரபாகரன் ஆரம்பத்தில், தமிழரசுக்கட்சி கிடப்பில் போடப்பட்ட பின்னர் தமிழர்களின் கட்சியாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி யின் உதய சூரியனையே தேர்ந்தெடுத்திருந்தார். ஆனால், அச்சின்னத்தினைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டத னால், இரண்டாவது தேர்தலுக்குச் சின்னத்தினைத் தேடிய வேளை கிடப்பில் கிடந்த வீட்டுச் சின்னத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் சின்னமாக அறிவித்தார்.

அந்த அறிவிப்பு நடைபெற்றதன் பின் பல தடவைகளில் தமிழித் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் சின்னமாக பதிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் விடுக்கப்பட்டாலும் அதனை தமிழரசுக்கட்சி ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. இந்த நிலையில் விடுதலைப்புலிகள் மீதான யுத்தம் உக்கிரமடைந்து ஆயுதப் போராட்டம் மௌனிக்கச் செய்யப் பட்டது. அதனையடுத்து ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்தினை தமிழரசுக்கட்சி சாதகமாக்கிக் கொண்டு தன்னுடைய ஏகாதிபத்திய ஆதிக்கத்தினை நடைமுறைப்படுத்தியது.

இதனால், ஆரம்பத்தில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது. அதன் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ். வெளியேறியது. அவ்வாறு பார்த்தால் ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்த ஒற்றுமை தமிழரசுக்கட்சியின் ஏகாதிபத்திய நடை முறை காரணமாக குலைந்து போனது என்றே கொள்ள லாம். பின்னர் 2023இல் தமிழரசுக்கட்சி தனி வழி தேடிச் சென்றது. தமிழரசுக்கட்சியின் வெளியேறல் குறித்த விமர் னங்கள் பல இருந்தாலும் விட்டுவைப்போம்.

தமிழர்களின் அரசியல் சின்னமாக வீடும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரும் அரசியல் கட்சியாகவும் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்த போதிலும் தமிழரசுக் கட்சியின் ஏகாதிபத்திய, மேட்டுக்குடி நிலைப்பாடு காரணமாக கட்சிகள் பல வெளியேறும் நிலை ஏற்பட்டிருந்தது. தமிழர் களின் அரசியலை பல கட்சிகளாக தனித்து நின்று மேற் கொள்ள முடியாது என்பதனைப் புரிந்து கொண்டமையினால் உருவான கூட்டமைப்பு சிதைந்து கொண்டிருக்கிறது. இது தமிழ்த் தேசிய நலனைக் கருத்தில் கொள்ளாத அரசியலா லேயே நிகழ்கிறது.

தமிழ்த் தேசிய நலனும், அதன் நிலைப்பாடும் மாற்றமுறா வகையில் அரசியல் பயணம் தேவையாக இருக்கிறது என்ற கோரிக்கையின் வெளிப்பாடே சிறிதரனின் தெரிவாகும். இதனை மறந்து தங்களுடைய வெப்புசார மனோநிலை களை காண்பித்து வருபவர்கள் சற்றே அமைதி கொள்வதே தமிழ்த் தேசியத்துக்காற்றும் பணியாக அமையும்.

வடக்கு கிழக்கு தமிழர்களுடைய அரசியல் வரலாறென்பது கொள்ளை ரீதியாகவும், கோட்பாடு மற்றும் நிலைப்பாடு ரீதியாகவும் சீராக கட்டமைக்கப்பட்டது. அவ்வாறே இதுவரை காலமும் முன்கொண்டு செல்லபட்டிருக்கிறது எனக் கொண்டால் அதனை வழிப்படுத்துவதற்கான செயற்பாடுக ளே தமிழரசுக்கட்சியின் புதிய தலைவர் முதலில் முன்நகர்த்த வேண்டும். ஆண்டாண்டு காலமாக தமிழர்களுடைய கோரிக்கைகளுக்கான அரசியலை தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் செய்கின்றனவா என்ற கேள்வி தோன்றும் போது அதனை சரியான வகையில் முன் நகர்த்தவேண்டியதும் காலத்தில் கட்டாயமாகும்.

தமிழ் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக் கட்சி என மிதவாத அரசியலுடனும், ரெலோ, புளொட், ஈரோஸ், ஈ.பி.ஆர்எல்எவ், ஈ.என்.டி.எல்.எவ். என ஆயுத அர சியலுடனும் தொடர்ந்த தமிழர்களுடைய விடுதலைக்கான முயற்சிகள் பலனற்றுப் போனதற்கு தமிழர்களிடமில்லா ததான ஒற்றுமையே காரணம். அதனைக் கட்டியெழுப்புவது முக்கியமானதாகும். அதற்கு மக்கள் அரசியல் மயப்படுத் தப்படுவது முதன்மையானது.

இலங்கையில் இன முரண்பாட்டுச் சிக்கல் தோற்றம் பெற்றதுமுதல் பேரினவாதிகளுடன் கொள்கை ரீதியான பல விடயங்களில் உடன்பாடுகள், இணக்கப்பாடுகள் எட்டப்பட்டி ருந்தாலும் ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகளின் மூலம் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டதும், ஏமாந்ததும் மாத்திரமே மிகுதியாகும்.

ஆயுத யுத்தம் மௌனிக்கப்பட்டதன் காரணமாக, இராஜ தந்திர போராட்டத்தை முன்நகர்த்தவேண்டியது கட்டாயமா னது. கடந்த 14 வருடங்களிற்கு முன்னர் 2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி விடுதலைப் புலிகளுடனான யுத்தம் மௌனிக்கப்பட்டாலும் இன்னமும் இனப் பிரச்சினைக்கான தீர்வை இலங்கை அரசாங்கம் முன்வைக்கவில்லை. இது ஒரு காலம் கடத்தும் செயற்பாடாகும்.

அரசியலை தமிழ் மக்கள் வெறுக்கும் அல்லது வேறு அர சியல்களுக்குள் உள்வாங்கப்படுகின்ற நிலைமை உருவாகி வருகிறது. இதனையும் தமிழர்களின் அரசியல் தரப்பினரே பொறுப்பாகவேண்டும். தமிழ்த் தேசியம் பலப்படுத்தப்படுத்தல் ஒன்றே காலத்தின் தேவை என்ற அடிப்படையில் புதிய தலைவர் செயற்பட வேண்டும். இது காலத்தின் கட்டாயமும்

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME




## தேசியப் பார்வை...

தேசியன்

# நெருப்போடு விளையாட எவரும் நினைத்துப் பார்க்கவும் கூடாது.

தமிழ் இனத்தின் எதிர்காலம் தொடர்பில் சிந்திக்கும் நம்மவர் எவரையும் உறுத்துகின்ற முதல் விடயம் நாம் பிளவுபட்டு நிற்பதுதான்!

யுத்தம் முடிவடைந்த 2009ம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான கடந்த 14 வருடங்களாக தமிழ்த் தேசிய அரசியல் சக்திகளால் ஒரே கொடியின் கீழ் ஒன்றுபட்டு நிற்க முடியவில்லை.

2010ம் ஆண்டு பாராளுமன்ற பொது தேர்தலில் ஏற்பட்ட பிளவுகளும் பிரிவுகளும், இடைக்கிடையே இணைவு கள்,மீண்டும் உறவுகள் என்ற ரீதியில் சில இடைவெளிக ளோடு, இன்று வரையில் ஒற்றுமையீனம் என்ற ஒரு பாரிய அரசியல் பிரச்சனையாக, தமிழ் மக்கள் மத்தியில் தொடர் கதையாய் நின்று கொண்டிருக்கின்றது.

இப்பொழுது தமிழ் மாநிலத்தில் தமிழ்த் தேசியத்தின் பெயரால் இயங்கிக் கொண்டு இருக்கும் ஒன்பது அரசியல் கட்சிகள் 4 அணிகளாக பிரிந்து நிற்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர். எல்.எப், தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் என 5 கட்சிகள் ஓரணியாகவும்

கடந்த ஆண்டு வரையில் கூட்டமைப்பில் பெரிய கட்சி எனக் கருதப்பட்ட தமிழரசுக் கட்சி இப்பொழுது தனி கட்சியாகவும்

கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வழக்கம் போலவே தனி அணியாகவும்

ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியும் தனி அணியாகவும

விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள்கூட்டணி தனி அணியாகவும

அனந்தி சசிதரன் அவர்களின் ஈழத்தமிழா் சுயாட்சிக்கழகம் தனி அணியாகவும

ஆனால் இவர்கள் எல்லோருமே, விக்னேஸ்வரனை தவிர, போர் முடிவடையும் வரை ஒன்றாக பயணித்தவர்கள் தான். புளொட் மட்டும் விதிவிலக்காக இருந்தது. தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் இணைந்து கொள்ள அது விரும்பிய போதிலும் ஏனோ அதற்கு அங்கு இடம் கிடைக்கவில்லை.

யுத்தம் முடிந்தும் ஓர் 2 ஆண்டு காலம் காத்திருந்த பின்னரே, அது இணைத்துக் கொள்ளப்பட்டது.

தமிழரசுக்கட்சியின் மேலாதிக்க மனோபாவமும், நடத்தையும் தான் கூட்டமைப்பு கடந்த ஆண்டு இறுதியோடு கலைந்து போய், உடனடியாகவே 5 கட்சிகளோடு மீண்டும் கூட்டமைப்பாக மறுபிறப்பு எடுக்க காரணமானது.

தற்பொழுது தமிழரசுக் கட்சியின் தலைவராக சிவஞானம் சிறீதரன் அவர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஓர் நிலையில் இறுக்கமான தலைமைத்துவத்தை புதிய தலைவர் அவர்கள் தமிழரசுக் கட்சிக்கு வழங்குவாரா! என்கின்ற கேள்வி தமிழ் அரசியல் வட்டாரங்களையும் தாண்டி கொழும்பு அரசியல் வட்டாரங்களிலும் அடிபடலாம் என்றாலும் கூட, இதைப்பற்றி எல்லாம் சாதாரண தமிழ் மக்கள் அலட்டிக் கொள்ளப்போவது கிடையாது,

எமது தமிழ் மக்கள் தமது அரசியல் வாதிகளை நன்றாக அறிந்து வைத்திருக்கின்றார்கள். தமிழ் அரசியல் மேடைகளில் பேசப்படும் ஒற்றுமை என்னும் விவகாரம் வெறும் புலுடா என்பது, அரசியலை நன்கறிந்த அனைத்து தமிழ் மக்களுக்கும் அத்துபடி!

இந்த புலுடா அரசியல் காரணமாகத்தான், வடக்கில் டக்ளஸ் தேவானந்தாவும் அங்கஜன் இராமநாதனும், கிழக்கில் பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தனும் வியாழேந் திரனும், எம் பிக்களாக மட்டுமின்றி அதிகாரத்துடன் கூடிய அந்தஸ்து கொண்ட பெரும் புள்ளிகளாகவும் வலம் வர முடிந்தது- முடிகின்றது.

அது, ஒரு மாதிரியான மக்கள் சேவை!. தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் பிரிந்து மோதிக்கொண்டிருக்கும் வரையில் இத்தகைய மக்கள் சேவைக்கு புதிது புதிதாக ஆட்கள் வந்து கொண்டுதான் இருப்பார்கள்.

இப்பொழுது உள்ள கேள்வி ஒன்றே ஒன்று தான்!

விடுதலைக்காக கண்ணீரும், செந்நீரும் சிந்திய சாதாரண தமிழ் மக்கள், "கண்ணீர் விட்டே வளர்த்தோம் சர்வேசா! கருகத் திருவுளமோ? என்று கையெடுத்து கும்பிட்டு கேட்காமல் விட்டாலும் கூட, தமக்குள்ளே இடைக்கிடையே மௌனமாக வேதனைப்படும் கையறு நிலையில் தான் தமிழ்த் தேசிய எழுச்சி இப்பொழுது இருந்து கொண்டிருக் கின்றது. ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் இதற்கு பல காரணங்கள் உண்டு ஆனால் முதல் காரணம்- பிரதான காரணம் ஒற்றுமைப்பட தவறி நிற்கும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் என்று தான் கூற வேண்டும்.

சகல முனைகளிலும் துன்பங்களையும், தொல்லைகளையும் தினசரி சந்தித்துக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசத்தின் மக்களின் மன உணர்வுகளை இந்த தமிழ் தேசியம் பேசும் கட்சிகளும்,

மிகுதி 06 பக்கம் பார்க்க...

# மக்கள் உரிமையை வென்றெடுக்க

# தமிழ்த்தேசியக் கட்சிகளே ஓரணியாகத் திரள்க! தமிழரசின் புதிய தலைவர் சிறீதரன் அழைப்பு!



2009ஆம் ஆண்டுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறிருந்ததோ அவ்வாறான நிலையை - தமிழ் மக்களின் அரசியல் ஏகப்பிரதிநிதிகள் என்ற நிலையை - தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எய்தவேண் டும். எனவே தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் சகல தமிழ்க்கட்சிகளும், தம் கட்சிகளின் நலனை முன்னிறுத்தாமல் மக்கள் நலனை முன்னிறுத்தி தமிழ்த் தேசியத்தின் பாதை யில் ஓரணியாக - தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பாக ஒன்றிணையுமாறு அழைக்கின் றேன் - இவ்வாறு தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சிவ ஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கான தேர்தல் திருகோணமலையில் நேற்று இடம்பெற்றது. சிறீதரன் வெற்றி பெற்று புதிய தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தல் தொடர்பிலும் தமிழரசுக் கட்சியின் எதிர்காலப் பயணப்பாடு தொடர்பிலும் பத்திரிகை ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு அழைப்பு விடுத்துள் ளார். தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்த வேண்டும் என்பதே எனது பெருவிருப்பம் . அதனை முன்னிறுத்தியே தமிழரசுக் கட்சி யின் தலைமைப்பதவிக்கான போட்டியில் நின்று, இப்போது தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். இந்தநிலையில் தமிழரசுக்கட்சிக்கும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் புத்துயிரூட்டுவதே என் முன்னுள்ள முதற்பணியென எண்ணுகி றேன். தமிழ் மக்களின் உரிமைக்காக, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பாக குரல் கொடுத்த, மக்களுக்காக அரசியல் பணி செய்த சக தமிழ்த்தேசியக் கட்சிகள் சிலபல காரணங்களால் பிரிந்து தனிவழியே பயணிக்கின்றன. இது எமது பொது எதிரிக்கே சாதகமானது. அதன் விளைவை கடந்த தேர்தல்கள் எமக்கு உணர்த்தியிருந்தன. 2009க்கு முன்னர் கூட்டமைப்பு எப்படி தமிழ் மக்களின் அசைக்கமுடியாத சக்தியாக மிளிர்ந்ததோ. அதேநிலையை மீண்டும் எட்டவேண்டும் என்பதே தமிழ்மக்களின் பெருவிருப்பம். எனது விருப்பமும் அதுவே. இப்போது அதற்கான காலம் கனிந்துள்ளது. இதற்காக அனைத்துத் தமிழ்த்தேசியக்கட் சிகளையும் கடந்தகால கசப்பான நினைவுக ளைக் களைந்து ஒன்றிணையுமாறு அன்புடன் அழைக்கின்றேன். தமிழ் மக்களின் நலனுக்காகவும் தமிழ்த் தேசியத் தின் நலனுக்காகவும் ஓரணியில் ஒன்றித் திருப்பது எம்முன்னால் உள்ள பெரும் பொறுப்பு. அதற்காக தமிழரசுக் கட்சி மட்டு மல்லாது. சகல தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஓரணியில் திரண்டு உழைக்கவேண்டும். சகல தமிழ்த் தேசியக்கட்சிகளையும் ஒன்றிணைக்கும் செயற்பாட்டை துரிதகதி யில் முன்னெடுக்கவுள்ளேன். அதன் மூலம் மக்களின் உரிமைகளையும், மாவீரர்களின் கனவுகளையும் வென்றெடுப்போம் - என்றார்.

## தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையை! வலுப்படுத்த வேண்டும் தமிழரசு!

### புளொட் தலைவர் சித்தார்த்தன் எம்.பி. வலியுறுத்து

தமிழ்த்தேசியக் கட்சிகளின் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்குத் தமிழரசுக் கட்சி உரிய பங்களிப்புக்களை வழங்க வேண் டும் என்று புளொட் அமைப்பின் தலைவரான சித்தார்த் தன் வலியுறுத்தியுள்ளார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக சிவஞானம் சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ள மையை முன்னிட்டு அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கான தெரிவு நடைபெற்று முடிந்த நிலையில் கட்சியின் புதிய தலைவராக சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு என் வாழ்த் துகள்.
இன்றைய காலகட்டத்தில் தமிழரசுக் கட் சியை விட வேறு பல தமிழ்த்தேசியக் கட்சிக ளும் உருவாகிச் செயலாற்றி வருகின்றன. பலமாகவிருக்கின்றன. அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்துதான் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெ டுத்துச் செல்லமுடியும். ஆகவே, தமிழ்த்தேசி யக் கட்சிகளின் ஒற்றுமையை வலுப்படுத்துவ தற்குத் தமிழரசுக் கட்சி உரிய பங்களிப்பு களை வழங்கவேண்டும் தமிழரசுக் கட்சி மிகநீண்டகாலப் பாரம் பரியமுள்ள கட்சி, பல தலைவர்களை உருவாக்கிய, தமிழ்த் தேசியத்தின் ஆணின்றேன்.வேராக விளங் கிய ஒரு கட்சி. கட்சியின் தமிழ்த் புதிய தலைவருக்கு நாங்கள் வாழ்த்துகள் கூறினாலும்கூட புதிய தலைவருக்கான தேர்தலை முன்னிட்டு நடத்தப்பட்ட பரப்புரைகள். அதனால் ஏற்பட்ட மன தேசியக் முறிவுகள் என்பன தமிழ்த்தேசிய உணர் உழைக் வுகளுக்கு நிச்சயமாகச் சிறந்ததாகத் தெரியவில்லை. தமிழரசுக் கட்சி எதிர்கா லத்தில் ஒற்றுமையாகச் செயற்படவேண்டும் என்பதுதான் முக்கியமான விடயம். அதுமாத் திரமன்றி அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் சேர்ந்து ஒரு கூட்டை அமைப் பதற்கு அல்லது முடிவுகளை எடுப்பதற்கு கட்சிக்குள்ளேயே இருக்கின்ற பிரிவு



தாக்கத்தைச் செலுத்தும். எனவே, தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சரியான முறை யில், யதார்த்தமாகச் செயற்பட்டு தமிழரசுக் கட்சிக்குள்ளே உருவாகியுள்ள அனைத்துத் தரப்புக்களையும் ஒருங்கிணைத்துச் செயற்படுவ வாலும், தன் மூலமாகத்தான் தமிழ்த்தேசியக் கட்சிகள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்த முடியும்.

தமிழரசுக் கட்சி 1952ஆம் ஆண்டில் சி.சிறீதரன் இரண்டு நாடாளுமன்ற உறுப் பினர்களை மாத்திரம் பெற்றிருந்த நிலையில் கட்சி பின்னர் படிப்படியாக வளர்ந்து - வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் முஸ்லிம் மக்களையும் சேர்த்து தமிழ்பேசும் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக வரக் கூடிய அளவுக்குப் பெருவளர்ச்சியை அடைந்து மிகவும் பலமான கட்சியாகத் திகழ்ந்தது. இந்த வளர்ச் சிக்கு தலைமை பதவிகளின் நேர்மைத் தன்மை, தமிழ்மக்களின் விடுதலைக்காக அனைத்தையும் அர்ப்பணித்துச் செயற் பட்டமை ஆகிய காரணங்கள்தான் தமிழர சுக் கட்சியின் பால் மக்களை ஈடுபாடு கொள்ள வைத்தது எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

## தமிழரசின் தலைவராக தெரிவானார் சிறீதரன்!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவு செய்யப்பட் டுள்ளார்.
தமிழரசுக் கட்சியின் புதிய தலைவருக்கான தேர்தல், திருகோணமலை நகராட்சிமன்ற கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்காக நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞா னம் சிறீதரன். எம்.ஏ.சுமந்திரன்.நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோர் போட்டியிட்டனர். யோகேஸ்வரன் தேர்தலுக்கு முன்னதாகவே சிறீதரனை ஆதரிக்குமாறு தனது ஆதர வாளர்களைக் கோரியிருந்தார். இதனால் இந்தத் தேர்தல் சம்பிரதாயத்துக்கு மும் முனைப் போட்டியாக இருந்தாலும், உண் மையில் இருமுனைப்போட்டியாகவே இடம் பெற்றது.
தலைவர் தெரிவுக்கான தேர்தலில், 321 பேர் வாக்களித்திருந்தனர். இதில் சி.சிறீதரன் 184 வாக்குகளையும், எம்.ஏ. சுமந்திரன் 137 வாக்குகளையும் பெற்று கொண்டனர்.47



மேலதிக வாக்குகளால் சிறீதரன் வெற்றி பெற்று. தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எதிர்வரும் 27, 28ஆம்திகதிகளில் திருகோணமலையில் இடம்பெறவுள்ள கட்சியின் மாநாட்டில் கட்சித் தலைவராக உத்தியோகபூர்வமாக சி.சிறீ தரன் பதவியேற்கவுள்ளார்.

## வெசாக் கொண்டாட ஐ.நா.விடம் பிச்சை!

இந்த வருடத்தின் வெசாக் நிகழ்வுகளைக் கொண்டாடுவதற்கு ஐ.நா. விடம்கோரிக்கை விடுக்கப்படவுள்ளதாக சமய மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித் தார் அமைச்சரின் உதவிக் கோரிக்கையை சீன - பௌத்த கலாசார ஊக்குவிப்புச்சங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. மேற்படி சங்கத்தின் பிரதிநிதிகள் அமைச்சரின் கோரிக்கை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இலங் கைக்கு வரவுள்ளனர். இலங்கைப் பிக்குக ளுக்கு சீனாவில் மகாயான பௌத்தம் பற்றிக் கற்பதற்கு வசதிசெய்து கொடுக்கு மாறும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.



# சிறீதரனுக்கு முழுமையான ஆதரவு! சுமந்திரன் அறிவிப்பு!



ஜனநாயகத் தேர்தல் மூலம் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவுசெய்யப் பட்டுள்ள "தலை வர் சிறீதரனுக்கு எனது முழுமையான ஆதரவை வழங்குவேன் என்று நாடாளு மன்ற உறுப்பினரும் தலைவர் தெரிவுக்கான வேட்பாளர்களில் ஒருவராகவுமிருந்த எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். வாக்கெடுப்பு முடிவுகள் வெளியான பின் னர் இடம்பெற்ற ஊடகவிய லாளர்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது தமிழரசுக் கட்சித் தலைவருக்கான தேர்தல் மிக ஆரோக்கியமான வகையில் இடம்பெற் றிருக்கின்றது. கட்சித்தலை வரை தேர்தல் மூலம் தெரிவுசெய்து எமது கட்சி உட்கட்சி ஜனநாயகத்தை நாட்டுக்கும் சர்வதேசத் துக்கும் வெளிப்ப டுத்தியிருக்கின்றது. இதிலே வெற்றி பெற்ற நண்பன் சிறீதரனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித் துக்கொள்கின்றேன்.

எமது தலைவர் மாவை சேனாதிராஜா வழிநடத்திய தமிழரசுக் கட்சிப் பொறுப்பு. இப்பொழுது சிறீதரனுக்கு வழங்கப்பட்டி ருக்கின்றது. இந்தப் பயணத்திலே நாம் தொடர்ந்தும் ஒன்றாகவே பயணிப் போம். இதை நாம் இருவரும் தேர்தல் காலத்திலும் தெளிவாக மக்களுக்குச் சொல்லியிருக் கின்றோம். அவ்வாறே தொடர்ந்து பயணிப் போம்.

ஆகவே, எனது முழுமையான ஆதரவி னைத் தற்போது ஜனநாயக முறையில் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள தலைவர் சிறீதரனுக்கு வழங்குவேன் என்பதை அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்கிறேன் - என்றார்.

# சிறீதரனை வாழ்த்திய ரணில்!



தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரனுக்கு ஜனாதிபதி ரணில் வாழ்த் துத் தெரிவித்துள்ளார்.

அணிசேரா மாநாட்டுக்காக உகண்டாவின் தலைநகர் கம்பலா வில் தற்போது ரணில் முகாமிட்டுள்ளார். தமிழரசுக் கட்சியின் தலை மைப் பதவி தொடர்பான தேர்தல் முடிவுகள் தொடர்பில் அவருக்கு நேற்றுத் தெரியப்படுத் தப்பட்டதைத் தொடர்ந்தே சிறீதரனுக்கு நேற்றுமாலை 3 மணியளவில் தொலைபேசி அழைப்பெடுத்து அவர் வாழ்த்துத் தெரிவித் துள்ளார்.

இதேவேளை, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் சில அமைச் சர்கள், பெரும்பான்மைக் கட்சி களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பி னர் சிலரும் சிறீதரனுக்குத் தமது வாழ்த் தைத் தெரிவித் துள்ளனர்.

அதேவேளை, தமிழரசுக் கட்சியின் தலை வராக சிறீதரன் தெரிவான விட யத்தை தென் னிலங்கையின் இணைய ஊடகங்கள் முக் கியத்துவம் கொடுத்து நேற்று வெளியிட் டிருந்தன.

## தமிழர்களுக்கு தன்னாட்சி வழங்குவது

# இந்தியாவின் பாதுகாப்பிற்கு மிக அவசியமான ஒன்றாகும்

## -நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன்-

இலங்கையின் இன்றைய அரசியல் பொருளாதார சூழல் இந்தியாவுக்கு சாதகமாக இருக்கலாம் ஆனால் அது நிரந்தரமானது அல்ல என கூறியுள்ள நாடாளுமன்ற உறுப் பினர் சீ.வி.விக்னேஸ்வரன், வடகி ழக்கு தமிழ் மக்களுக்கு உச்சபட்ச அதிகார கட்ட மைப்பு
ஒன்றை வழங்குவதே இந்தியாவுக்கு நிரந் தர பாதுகாப்பு எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.
கொழும்பு தமிழ் சங்க மன்றத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற காலஞ்சென்ற பொன்னம்பலம் சங்கரப்பிள்ளையின் ஞாப கார்த்த நிகழ்வில் இலங்கையில் தமிழர் எதிர் காலம் என்ற தலைப்பில் பேருரை ஆற்றி யபோதே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

இதன்போது மேலும் அவர் குறிப்பிட்டதாவது, இலங்கையில் தமிழ் மக்களின் எதிர்கா லத்தை தீர்மா னிப்பதில் இந்தியாவின் பங்கு முக்கியமானது. அவர்களின் பங்கை நாம் உதாசீனம் செய்துவிட முடியாது. அதேபோல, மேற் இந்தியாவின் பாதுகாப்புக்கு, குறிப்பாக இந்தியாவின் தென் கோடியின் பாதுகாப் புக்கு,
இலங்கையின் வடக்கு - கிழக்கில் வாழும் மக்கள் தம்மைத் தாமே ஆளும் உச்சபட்ச அதிகாரக் கட்டமைப்புடன் இருப்பதும் அவசி யம் ஆகும்.

இந்தியாவின் நிரந்தரமான நம்பகமான நண் பர்கள் இலங்கை வாழ் தமிழ் மக்கள் மட்டு மே. இலங்கையின் இன் றைய பொரு ளாதார, அரசியல் சூழல் இந்தியாவுக்கு சாதக மாக இருக்கின்றது. ஆனால், அது நிரந்தர மானது அல்ல. இது வரலாற்று ரீதியான உண்மை. இதன் அடிப்படையில் இந்தி யாவுடன் நாம் நெருக்கமான அரசியல் சமூக, பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை பலப்படுத்துவது இலங்கை யின் தமிழ் மக்களின் பாதுகாப் பானதும் சுபீட்சமானது எதிர்காலத்துக்கு இன்றியமை யாதது



என்றார்.
இதேபோல் அண்மையில் உலக தமிழர் பேரவை மேற் கொண்ட இமாலய பிரகட னத்தை கடுமையாக
கொண்ட இமாலய பிரகடனத்தை கடுமை யாக தனதுரையில் விமர்சித்த விக்னேஸ் வரன்,
வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ்
மக்களின் எந்த பங்குபற்றலும் ஆலோச னையும் இன்றி இந்த பிரகடனம் மேற்கொள் ளப்பட்டுள்ளதாகவும் இது ஒரு வினோதமா னதும் கோமாளித்தனமானதும் அர்த்தமற்ற துமான செயற்பாடு என்றும் எவ்வாறு
இதற்கு ஐரோப்பாவின் முக்கிய நாடு ஒன்று பெருந் தொகை பணத்தை வழங்கியது என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை என்றும் தெரிவித்
தார். புலம்பெயர் சமூகத்தில்
மக்கள் செயற்பாடுகளில் இருந்து தூர விலகி ஒரு சிறு குழுவாக செயற்படும் சிலர்,தாயகத் தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தாயகத் தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள், சிவில் சமூகம், மக்கள் அமைப்புக்கள் ஆகியவற் றிடம் எந்த கலந்துரையா டல்களையும் மேற்கொள்ளா மல் தமிழ் மக்களின் தலை விதியை தீர்மானிப்ப வர்கள் தாங்கள் தான் என்ற அடிப்ப டையில் இந்த பிரகடனத்தை செய்திருந்தார்கள்.
தாயகத்திலும் புலம்பெயர் மக்கள் மத்தியிலும்

இது கடும் அதிருப்தியை ஏற்படுத்தி இருப்ப துடன் பல சந்தேகங்களையும் தோற்று வித்திருக் கின்றது. நாட்டில் நல்லிணக் கத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கையின் பௌத்த பீடங்களுடன் பேசுவதும் அவர்க ளுடன் இணைந்து செயற்படுவதும் அவசி யம். இதனை நானும் வலியுறுத்தி வருகின் றேன்.
ஆனால், இதனை மிகவும் கவனமாக, நன்கு ஆராய்ந்து கடந்த காலங்களில் பெற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் உண்மை ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். நாட்டில் உள்ள தமிழ் மக்களின் எந்த பங்குபற்றுதலும் இன்றி, உண்மை களை உதாசீனம் செய்து, விளம்பர நோக்கங்களுக்காக மேற்கொள்ளும் எந்த நடவ டிக்கைகளும் தோல்வியையே ஏற்படுத் தும் என்பதுடன் இருக்கும் நிலைமைகளை மேலும் மோசமடையவும் செய் யும். எது எப்படி இருந்தாலும், எமது மக்கள் தெளிவாக இருக் கிறார்கள். துவாரகா உயிருடன் இருக்கிறார் என்று அண்மை யில் கூறப்பட்ட விடயமும் இத்தகைய ஒரு கோமாளித்தன மான செயற்பாடே ஆகும். எது சரி, எது பிழை, எது உண்மை எது பொய் என்பவற் றை வேறு
படுத்தி அறியும் அளவுக்கு எமது மக்கள் தெளிவடைந்து விட் டார்கள். என்று விக்னேஸ் வரன் தெரிவித்தார்.

சுதந்திரத்துக்கு பின்னர் காந்திய வழிகளில் தமிழ் மக்கள் மேற்கொண்ட போராட் டங்கள் ஏன், எதற்காக வெற்றி யளிக்கவில்லை என்பது பற்றி விளக்கிய அவர், எதற் காக விடுதலைப்புலிகளின் தலை வர் ஆயுதங் களை தூக்குவ தற்கு நிர்பந்திக்கப் பட்டார் என்பதையும் தெளிவுபடுத்தி னார் .
இருந்தபோதிலும், இன்றைய கால கட்டத்தில் வரன், பூகோள மயமாக்கலும், நவீன தமிழ் தொழில்நுட்ப வளர்ச்சியும், புலம்பெயர்வுக ளும் நிலை மைகளை நிலைமையை மாற்றிவிட்டுள்ளன என்றும் வன்முறையற்ற அறிவார்ந்த போராட்டங்கள் ஊடாக தமிழ் மக்கள் தமக்கு எதிரான அடக் குமுறைகளை எதிர்ப்பதற்கும் தமது உரிமைகளை வென் றெடுப்பதற்கும் அதிக வாய்ப்புகள் இருப்பதா கவும் விக்னேஸ்வரன் குறிப்பிட்டார்.

இலங்கையில், சுதந்திரம் கிடைத்த நாள் முதல் தமிழ் மக்களுக்கு எதிராக மேற் கொள்ளப்பட்டுவரும் இனம் சார்ந்த அடக்குமு றைகள் காரண மான இன முரண்பாடும் தமிழ் மக்களின் தொடர் ச்சியான போராட்ட முமே இன்றைய இலங்கையின் அவல நிலைக்குக் காரணம் என்றும் தமிழ் மக்க ளுக்கு எதிரான அடக்குமு றைகள் இருக்கும் வரை தமிழ் மக்கள் சளைக்காது போராடத் தான் போகின்றார்கள் என்றும் இது ஒட்டு மொத்த நாட்டின் வளர்ச்சிக்கும் சுபீட்சத்துக் கும் நல்லது அல்ல என்று விக்னேஸ்வரன் மேலும் தெரி வித்தார்.

# பணவீக்கம் அதிகரிக்கும்! மத்திய வங்கி அறிவிப்பு!



இந்த மாதம் நாட்டில் பணவீக்கம் அதிக ரிக்கும் என மத்திய வங்கியின் ஆளுனர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித் துள்ளார்.

பெறுமதி சேர் வரி அதிகரிப்பு மற்றும் காலநி லை சீர்கேடு போன்ற காரணிகளினால் பணவீக்கம் உயர்வடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறிப்பாக காலநிலை சீர்கேட்டினால் விநி யோகத்துறைக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் பண வீக்கத்தை அதிகரிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

குறுகிய காலத்திற்கு ஏற்பட்ட காலநிலை மாற்றமானது தற்பொழுது வழமைக்குத் திரும்பி வருவதாகவும் இதனால் பணவீக்க அதிகரிப்பும் தற்காலிகமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீண்ட கால அடிப்படையில் மத்திய வங் கியின் இலக்கான 5 வீதத்திற்கு குறைவாக பணவீக்கத்தை பேண முடியும் என நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் நுகர்வோர் விலை சுட்டியின் பிரகாரம் பணவீக்கம் 4.2 வீதமாக காணப்பட்டதாகவும், இது இந்த மாதம் 7 வீதமாக உயர்வடையலாம் எனவும் மத்திய வங்கி ஆளுனர் தெரிவித்துள்ளார்.



# துன்பத்தில் வாடிப்போயுள்ள மக்கள் தொடர்பில் அரசியல்வாதிகள் கரிசனை காட்டவில்லை.

## செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் பகிரங்க குற்றச்சாட்டு




நாட்டு மக்கள் துன்பத்தில் வாடும் நிலையில், நாட்டிலுள்ள அரசியல்வாதிகள் சிறிதும் அக்கறைப்படாதுள்ள தாக, தெல்லிப்பழை சிறீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலை வரும், பிரபல சமயச் சொற்பொழிவாளரு மான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிரு மு ருகன் குற்றஞ்சாட் டியுள்ளார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் வரி அதிக ரிப்பு தொடர் பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரி விக்கையில்,

நாட்டை ஆட்சிசெய்பவர்களோ, அல்லது அரசியல்வாதிகளோ ஏழை மக்கள் குறித்து கிஞ்சித்தும் கவலைப்படுவதில்லை. ஏழைக ளின் கண்ணீரைத் துடைப்பதற்கு முன்வரு வதில்லை. எதுவாக இருந்தாலும் மனித னின் அடிப்படைத் தேவையாகிய உணவு, சுகாதாரம், இருப்பிடம் இவை மூன்றிற்கும் இந்த நாட்டில் மிகவும் கஷ்டமான சூழல் ஏற்பட்டுள்ளது.பஞ்சம் என்பது வெளிப்படை யாகத் தெரியாவிட்டாலும் கூட, ஒருவேளை நல்ல உணவை உண்ண முடியாமல் தவிர்த்து வருபவர்கள் ஏராளம் பேர் உள் ளனர்.

மரக்கறியாக இருந்தாலும் சரி, உணவுப் பண்டங்கள் என்றாலும் விலைகள் மிக அதிகமாக அதிகரித்துள்ளன. ஒரு சாதாரண பணியில் ஈடுபட்டுள்ள அன்றாட உத்தி யோகம் பார்ப்பவர்கள் கூட,களைப்பை போக் குவதற்கு தேநீர் அருந்தக்கூட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உணவகங்களில் அதிகரித் துள்ள உணவுப் பொருட்களின் விலையைப் பார்த்தவுடன் உணவு வாங்கும் எண் ணத்தை கைவிடநேரிடுகின்றது. இத்தகைய நிலையில் நிறுவனங்கள் அதற்கு ஏற்ப சம்பளத்தை வழங்க முடியாத நிலை யில், வருமானம் இன்றி செயற்படுகின்றன. தவிரவும், வடபகுதிக்கு ஏற்பட்டுள்ள இன்னு மொரு துன்பமாக, தென்னிலங்கையைச் சேர்ந்த பெரிய நிறுவனங்கள் பல்பொருள் அங்காடி என்னும் பெயரில் பெரிய அங்காடி களை உருவாக்கி பணத்தை திரட்டிக் கொண்டு செல்கின்றன . இதனால் கிராமத் திலுள்ள வர்த்தகர்கள், வாணிபர் கள் மற்றும் பெட்டிக்கடைகள் வியாபாரத்தை இழந்து மூடும் நிலைக்குச் சென்றுள்ளன.

தென்னிலங்கையிலிருந்து வியாபாரம் செய்யும் பலபொருள் வாணிப நிறுவனங்கள் கடன்வழங்கமாட்டார்கள்.

இத்தகைய பொருளாதாரச் சூழலில் கடன் வாங்க முடியாமலும், உணவில்லாமலும் மிகுந்த நெருக்கடியான சூழலில் மக்கள் தவிக்கின்றனர். உண்மையான மக்களின் உணர்வுபூர்வமான பிரச்சினைகளை யாரும் அறிந்து கொள்வதில்லை. வெறும் வேடிக்கையான பேச்சுக்களையும், கூட்டங்களையும் நடத்துகின்றோம். ஏழை மக்களை எவரும் திரும்பிப் பார்ப்பதில்லை.

இலங்கை மக்களின் மிக முக்கியமான உணவுத் தேவையை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங் கமும்,அனைத்து அரசியல் தலைவர்களும் அதற்காக உருப்படியான வேலைகளைச் செய்து மூன்று வேளையும் மக்கள் கஸ்டப் படாது உணவை உட்கொள்ள வழிசெய்ய கடைகள் முடியாத நிலையில், என்ன தான் வாய்வீரம் பேசுவது அர்த் தமற்றதாகவே அமையும்.

இத்தகைய அரசியல் சூழலில் தான், மக்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். நாட்டிலிருந்து வெளியேற வசதியில்லாத ஏழைகள் வாடி வதங்கிப் போயுள்ளனர்.

நல்ல சுகாதாரமான உணவு கிடைக்காமல், பெருமளவு குழந்தைகள் நோயால் வாடு கின்றனர். இவற்றை யாருக்கு எடுத்துரைப்ப தென சிந்திப்பதைத் தவிர வேறுவழியில்லை மக்களை எல்லாம் வல்ல இறைவனே காத்தருள வேண்டும் என அவர் தனது உரை யில் மேலும் குறிப்பிட்டார்.

# நிகழ்நிலை காப்புச் சட்டம் சர்வாதிகார ஆட்சிக்கு வழி திறக்கும்

## வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்



தற்போது பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்துள்ள உத்தேச நிகழ்நிலைக் காப்புப் சட்டம் நிறைவேற்றப்படும் சந்தர்ப்பத்தில் இந்த நாடு எதிர்காலத்தில் சர்வாதிகார ஆட்சியை எதிர் கொள்கின்ற அபாயம் உள்ளது.

மக்களின் எழுத்துச் சுதந்திரம் , பேச்சுச் சுதந்திரம் , ஊடக சுதந்திரம் போன்ற வற்றில் பாரிய அடக்குமுறை ஏற்படவுள்ளது இது அரசியலமைப்பில் உள்ள அடிப்படை சுதந்திரங்களை கேள்விக்கு உள்ளாக்கு கின்றது.

சமூகவலைத்தளங்கள் அச்சு ஊடகங்கள் அரசாங்கத்தை அரசின் செயற்பாடுகளை விமர்சித்து எழுத முடியாத அடக்குமுறை அதனை மீறினால் சட்ட நடவடிக்கை என ஏதேச்சதிகாரப் போக்கில் ஆட்சி புரிவதற்கு வழி திறக்க உள்ளது நிகழ் நிலைக் காப்புச் சட்டம்.

நாட்டில் உள்ள அனைவரையும் குறி வைத்து இச்சட்டம் கொண்டுவரப்பட்டாலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களுக்கு இது மிகப் பெரிய அபாய மாகும் காரணம் சிங்கள அரசாங்கத்தின் தமிழின அடக்குமுறை இருப்புக்களின் கபளீகரம் போன்றவற்றை எதிர்த்து குரல் கொடுக்க முடியாது மீண்டும் ஒரு தமிழின அழிப்பை சந்திக்கும் ஆபத்துடன் உரிமைப் போராட்டமே கேள்விக்குள்ளாகும் நிலை ஏற்படும்.

மக்களின் எதிர்ப்பை எதிர்கொள்ள முடியாத ஆட்சியாளர்கள் சட்டத்தின் மூலம் அடக்கு முறையை இரும்புக்கரம் கொண்டு கட்டுப் படுத்தி ஆட்சியை தொடரவும் தேர்தல்களை எதிர் கொள்ளவும் கடந்த கால ஊழல்களில் இருந்து தங்களை காப்பாற்றவும் இப்படியான ஜனநாயக அடக்குமுறைச் சட்டங்களை மக்களுக்குள் திணிக்க முயற்சிக்கின்றனர்.

# இலங்கையில் தமிழ் சமூகம் தொடந்தும் வஞ்சிப்பு!

## கனேடியப் பிரதமர் ட்ரூடோ தெரிவிப்பு!



இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமை கள் சவால்களுக்குட்பட்டு வருகின்றன. எனவே தமிழ்ச் சமூகத்துடன் கனடா தொடர்ந்தும் பயணிக்கும் என்று கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:-

1983ஆம் ஆண்டு இலங்கையில் வன் முறைகள் ஆரம்பித்த காலத்தில் எனது தந்தையாரின் தலைமையிலான லிபரல் கருத்துக கட்சி ஆயிரத்து 800 இலங் கைத்தமிழர் களைக் கனடாவில் குடியேற் றியது. இந்தத் தொகை கடந்த பல தசாப்தங்க ளில் அதிகரித்து இன்று புலம்பெயர்ந்த தமிழர்கள் அதிகமாக வசிக்கும் நாடாக கனடா பார்க்கப்படுகிறது.

அத்துடன் கனடாவின் வளர்ச்சிக்கு தமிழர் களின் பங்களிப்பு வியக்கத்தக்கது. இதன் காரணமாகவே 2016ஆம் ஆண்டு, ஜனவரி மாதத்தை தமிழர் வரலாற்று மாதமாக கனேடிய அரசாங்கம் பிரகடனம் செய்தது.

இந்தநிலையில் இலங்கைத்தமிழர்களின் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் கனடா தொடர்ந்தும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் ஏனைய அமைப் புகளுடன் செயற்பட்டு வருகிறது. இந்தச் செயற்பாடுகள் தொட ரும்" - என்றார்.


# நீயூ ஸ்ரார் ரெயிலறிங்

ஆண் பெண் இருபாலருக்குமான உடைகள்
மிகச் சிறந்த முறையில் தைத்து கொடுக்கப்படும்.



பெண்களுக்கான ஆடைகளை
18 வருட காலமாக தைத்து கொடுக்கும் ஒரே ஸ்தாபனம்

சந்தை தெற்கு வீதி, சுன்னாகம் 0770785326 - 0772528976



# உடனடி வேலைவாய்ப்பு வடக்கு மாகாணம்

முழுவதும் தேசியம் வாராந்த பத்திரிகையை
விநியோகம் செய்வதற்கு ஆண்/ பெண்
இருபாலரும் தேவை

தொடர்புகளுக்கு:
0771499094 076567 3339

# பிரமாண்ட முறையில் நடந்த அயோத்தி ராமர் கோவில் கும்பாபிஷேகம்!



அயோத்தி ராமர் கோவில் கும்பாபிஷேகம் இன்று பிரமாண்டமான முறையில் மிகவும் கோலாகலமாக நடந்து முடிந்தது. பிரதமர் நரேந்திர மோடியினால் சமய சடங்குகள் செய்யப்பட்டதுடன் கும்பாபிஷேகம் நடத்தப் பட்டது. இதையடுத்து பால ராமரின் கண் திறக்கப்பட்டது.

கடந்த 18ஆம் திகதி கோவில் கருவறையில் 5 வயதான குழந்தை பருவ ராமர் சிலை நிறு வப்பட்டது. இந்த சிலையே இன்று பிரதிஸ் டை செய்யப்பட்டது.

கோயில் கருவறையில் உள்ள சிலைக்கு இன்று அர்ச்சகர்கள் பூசை, சடங்குகள் செய் தனர்.

பிரதமர் மோடி 12.05 மணிக்கு கோவிலுக் குள் வந்தார். இந்தநிலையில் கும்பாபிஷேகம் மதியம் 12.15 முதல் 12.45 மணிக்குள் நடைபெற்று முடிந்தது.

இந்த நேரத்தில் பால ராமர் சிலைக்கு பிரதிஸ்டை சடங்குகள் செய்யப்பட்டு கும்பாபி ஷேகம் நடந்து முடிந்தது.

பிரமாண்டமான அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவிற்கு ஏராளமான பிரபலங்கள் வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள் ளன. ராமர் சிலை பிரதிஸ்டை செய்யப்பட்ட போது ஆலயத்தில் திரண்டிருந்த சுமார் 8 ஆயிரம் சிறப்பு அழைப்பாளர்களும் பார்ப்ப தற்கு வசதி யான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

பல இடங்களில் அகன்ற திரைகள் வைத்து ஒளிபரப்பு செய்யப்பட்டது. 12.30 மணிக்கு பிராண பிரதிஷ்டை நடந்தபோது உலங்கு வானூர்தியில் இருந்து அயோத்தி ராமர் ஆலயம் மீது பூ மழை பொழியப்பட்டது. மதி யம் 1 மணி வரை சுமார் ஒருமணி நேரம் கரு வறை பூஜைகள் நடைபெற்றன.

# அயோத்தியை தொடர்ந்து இலங்கையை இலக்கு வைக்கும் இந்தியா



அயோத்தி கோவிலை தொடர்ந்து, தனுஸ் கோடியையும் இலங்கையையும் இணைக் கும் புது கடல் பாலம் தொடர்பில் மத்திய அரசு திட்டமிடுவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி இந்தியாவின் தனுஸ்கோடியை இலங்கையுடன் இணைக்கும் கடல் பாலம் அமைக்கும் திட்டத்தை மத்திய அரசு விரைவு படுத்த உள்ளதாக கூறப்படுகிறது.

இந்தநிலையில் தனுஸ்கோடியில் இருந்து தலைமன்னார் வரை பாலம் அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கமைய சுமார் 23 கிலோமீற்றர் நீள முள்ள பாலத்தை அமைப்பதற்கான சாத்தியக் கூறு ஆய்வை மத்திய அரசு விரைவில் மேற்கொள்ள உள்ளதாக செய்திகள் வெளி யாகியுள்ளன.

கடந்த ஜூலை மாதம் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க டெல்லி சென்றிருந்த போதே இந்த திட்டம் குறித்து கலந்துரையா டல்கள் இடம்பெற்றன.

இந்தநிலையில் இரு நாடுகளையும்



இணைக்கும் வகையிலான பாலத்தை அமைக்க முடியுமா என்பதினை பார்க்க அரசு தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்களை மதிப்பீடு செய்ய வேண்டும் என்று நிபுணர்கள் கூறியுள் ளனர். இதன்படி இரண்டு நாடுகளைக் கடல் பாலம் மூலம் இணைக்க வேண்டும் என்பது குறித்துக் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மே லாகவே கோரிக்கையாக விடுக்கப்பட்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தேசியப் பயணத்தை நோக்கிய சிறீதரனின் பாதை...

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினராக பொது வெளியில் அறியப்படும் கௌரவ.சிவஞானம் சிறீதரன் அவர்கள், யாழ்ப்பாணம் அல்லைப் பிட்டி- மண்டைதீவைப் பூர்வீகமாகக் கொண்ட சின்னத்துரை சிவஞானம், நெடுந்தீவு மேற்கைப் பூர்வீகமாகக் கொண்ட கந்தையா இலட்சுமி ஆகியோரின் மகனாக கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சி மண்ணில் 1968 டிசம்பர் 8இல் பிறந்தவர்.

கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாட சாலை, கிளி/வட்டக்கச்சி மகாவித் தியாலயம், கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி, யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம் என்பவற்றில் பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1994இல் பொதுக் கலைமாணிப் பட்டத்தையும் (BA), 2003 இல் கல்வி முதுமாணிப் பட்டத்தையும் (M.Ed), கொழும்பு தேசிய கல்வி நிறுவ கத்தில் (NIE) 1997இல் விவசாயபாட விசேட கற்கையையும் (Sp.Tr.Ag)இ 2000 இல் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவில் சிறப்புத் தேர்ச்சியையும் (PGDE (Merit))> 2009 இல் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோ மாவையும் (PGDEM) நிறைவு செய்துள் ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் புகழ் பூத்த பாட சாலைகளில் 12 ஆண்டுகள் ஆசிரியராகவும், கிளிஃகோணாவில் மகாவித்தியாலயம், கிளி/கண்டாவளை மகாவித்தியாலயம், கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம் (கனிஸ்ரா) ஆகிய பாடசாலைகளில் 08 ஆண்டுகள் அதிபராகவும் பணிபுரிந்து. இருபது ஆண்டுகாலம் கல்விப்பணி ஆற் றியவர்.

2010 ஆம் ஆண்டு முதல் தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்த இவர், 2010, 2015 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தல் களில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி) வேட்பாளராகப் போட்டியிட்டு தொடர்ச்சியாக மூன்று தடவை களும் அதிகூடிய விருப்பு வாக்குக ளால் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தனது மக்கள் மணியை ஆற்றிவருகிறார்.



# கச்சதீவில் இம்முறை 8000 பக்தர்களுக்கு அனுமதி!

யாழ்ப்பாணம் கச்சதீவுத் திருவிழாவில் இம்முறை 8 ஆயிரம் பக்தர்கள் அனுமதிக் கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

கச்சதீவுத் திருவிழா தொடர்பான முன்னா யத்தக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே இலங்கையில் இருந்து 4 ஆயிரம் பக்தர்கள். இந்தியாவிலிருந்து 4 ஆயிரம் பக்தர்கள் என 8 ஆயிரம் பக்தர் களை அனுமதிப் பது என்று தீர்மானிக் கப்பட்டுள்ளது. திருவிழாவில் பங்குபற்று வோருக்கான சுகாதாரம். போக்குவரத்து உட்பட அடிப்படை வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் உணவு போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. குறித்த முன்னாயத்தக் கூட்டத்தில் யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், நெடுந்தீவு பிரதேச செயலர், நெடுந்தீவு பங்குத்தந்தை, யாழ். மறை மாவட்ட குரு முதல்வர். கடற்படையின் பிராந்திய பொறுப்பதிகாரி, பொலிஸ் உயரதி காரி கள். இராணுவ உயரதிகாரிகள் மற்றும் துறைசார் திணைக்களின் தலைவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.



# நெருப்போடு விளையாட எவரும் நினைத்துப் பார்க்கவும் கூடாது.

அவற்றின் தலைவர்களும், தளபதிகளும் எப்பொழுதுதான் உணரப் போகின்றார்கள்?

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக தார்மீகப் பொறுப்பை ஏற்றுள்ள சிவஞானம் சிறீதரன் அவர்கள் கட்சியின் முன்னைய தலைவர்களைவிட எவ்வாறு கட்சியையும், மக்களையும் வழிநடத்தி செல்லப் போகின் றார்? இவரது இந்த காலப்பகுதியிலாவது ஏனைய தமிழ்த் தேசியத்துக்கான கட்சிக ளுடன் இணைந்து ஒற்றுமையுடன் பயணிக் கும் வாய்ப்புக்களை ஏற்படுத்துவாரா? என்ப தை சற்று பொறுத்திருந்து பார்ப்போம்!

தமிழ்த் தேசத்தின் நெருக்கடியான இன்றைய நிலைமையில் இவர்களை எல்லாம் ஒற்றுமைப்பட வைப்பதற்கு என்னதான் வழி? மனம் திருந்தி இவர்கள் ஒற்றுமைப்பட வில்லை என்றால், மனம் வருந்தி இவர்கள் ஒற்றுமைப்படும் காலம் கட்டாயமாக வரும். ஏன் எனில் வரலாறு மீண்டும் நிகழ்கின்றது என்பது ஓர் நிரந்தரமான உண்மை.

# கிழக்கில் சிவந்த சுவடுகள் ௨



## வீரமுனை படுகொலை

1990 ஆம் ஆண்டு ஒகஸ்ட செப்டம்பர் ஒக்டோபர் மாதங்கள் என்பது கிழக்கில் இரத்த ஆறு ஓடிய காலப்பகுதியாகும்

இந்த படுகொலைகளை சிறிலங்கா படைகளின் துணையுடன் முஸ்லீம் ஊர்காவல் படையினரே செய்திருந்தனர்.

1984 ஆம் ஆண்டுக்கு பின்னர் கிழக்கில் முஸ்லீம் ஊர்காவல் படைகள் அமைக்கப்பட்டன. முஸ்லீம் ஊர்காவல் படை என்ற பெயரில் அமைக்கப்பட்ட இந்த ஆயுதக்குழுக்களின் முக்கிய நோக்கம் தமிழர்களை படுகொலை செய்து கிழக்கில் தமிழினத்தை முற்றாக இல்லாமல் செய்வதாகும்.

முஸ்லீம் ஊர்காவல் படை தவிர கிழக்கில் ஜிகாத் குழு, ஒசாமா குழு உட்பட 18க்கும் மேற்பட்ட முஸ்லீம் ஆயுதக்குழுக்கள் இயங்கி வருவதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. முஸ்லீம் ஆயுதக்குழுக்களுக்கு தானே ஆயுதங்களை வழங்கி வைத்ததாக எம்.எல்.ஏ.எம். கிஸ்புல்லா வீடியோ மூலமான உரை ஒன்றில் பகிரங்கமாக தெரிவித்திருந்தார்.

இலங்கை சுதந்திரமடைவதற்கு முதல் கிழக்கில் பெரும்பான்மையாக தமிழர்களே வாழ்ந்தனர். இந்த நிலையை மாற்றி தாம் பெரும் பான்மை இடத்தை பிடிக்க வேண்டும் என்ப தற்காக கிழக்கில் தமிழர்கள் மீது காலத்திற்கு காலம் தாக்குதல் நடத்தப்பட்டது.

தமிழர்களை அழித்து வந்ததுடன் கிழக்கில் 43க்கு மேற்பட்ட கிராமங்களிலிருந்து தமிழர்களை வெளியேற்றி விட்டு அக்கிராமங்களை முஸ்லீம்கள் ஆக்கிரமித்து கொண்டனர் என அழிந்த தமிழ் கிராமங்கள் என்ற நூலில் எஸ்.ஜெயானந்தமூர்த்தி விபரித்துள்ளார்.

1990ஆம் ஆண்டில் மட்டுமல்ல 1945ஆம் ஆண்டிலும் வீரமுனை கிராமத்தில் இருந்த தமிழர்கள் மீது முஸ்லீமகள் தாக்குதல் நடத்தி அந்த அழகிய கிராமத்தை இரத்த களறியாக்கினார்கள் கிழக்கில் நடந்த படுகொலைகள் பற்றி எழுதிய மணலாறு விஜயன் தனது நூலில் தெரிவித்திருக்கிறார்.

முஸ்லீம்களின் வாள் வெட்டுக்கும் கத்தி வெட்டுக்கும் அஞ்சிய தமிழ்க்குடும்பங்கள் வீரச்சோலை, வளதாப்பிட்டி, மல்லிகைத்தீவு மல்வத்தை போன்ற கிராமங்களில் வாழ்ந்து வந்தனர்.

1945ம் ஆண்டிற்குப் பின்னர் ஏறக்குறைய முப்பத்தியாறு ஆண்டுகள் வீரமுனைக்கு வருவதும் தப்பி ஓடுவதுமாய் முஸ்லீமகளின் தாக்குதல்களால் தமிழர்கள் துன்பத்தையே அனுபவித்தனர என மணலாறு விஜயன் தனது நூலில் தெரிவித்திருக்கிறார்.

கொண்டவெட்டுவான் இராணுவ முகாமும் இக்கிராமத்தைச் சூழ இருந்த முஸ்லீம்களும் வீரமுனை போன்ற தமிழ் கிராமங்களிலிருந்து தமிழர்களை அகற்ற வேண்டும் என்றே செயற்பட்டனர்.

### தமிழர்கள் மீதான உச்சக்கட்ட தாக்குதல் 1990ல் நடைபெற்றது.

கிழக்கு பல்கலைக்கழக படுகொலை, சத்துருக்கொண்டாள் படுகொலை. வீரமுனை படுகொலை, புதுக்குடியிருப்பு படுகொலை, காரைதீவு படுகொலை சம்மாந்துறை படுகொலை, சித்தாண்டி படுகொலை, பொத்துவில் படுகொலை. கலமுனை படுகொலை துறைநீலாவணை படுகொலை, ஏறாவூர் வைத்தியசாலை படுகொலை, கோராவெளி ஈச்சையடித்தீவு படுகொலை, ஏறாவூர் படுகொலை. நற்பிட்டிமுனை படுகொலை, கொக்கட்டிச்சோலை படுகொலை என கிராமம் கிராமமாக ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சமடைந்திருந்த அப்பாவி தமிழர்களை சிறிலங்கா படையினரின் துணையுடன் முஸ்லீம் ஆயுதக்குழுக்கள் படுகொலை செய்தனர். இந்த படுகொலை சம்பவங்களில் ஒன்றுதான் அம்பாறை வீரமுனை சித்தயாத்திரை பிள்ளையார் ஆலயத்தில் தஞ்சமடைந் திருந்த அப்பாவி பொதுமக்கள் மீது நடத்தப் பட்ட தாக்குதலாகும்.

1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதிஆலயத்தில் தஞ்சமடைந்திருந்த மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் 54 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். இக்காலப்பகுதியில் வீரமுனை பகுதியில் மொத்தம் 232 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை ஜாம்மா தொழுகையின் பின்னர் பள்ளிவாசலில் இருந்து வாள்கள் கத்திகள் துப்பாக்கிகள் சகிதம் புறப்பட்ட முஸ்லிம்கள் வீரமுனை பிள்ளையார் கோவிலில் தஞ்சம் அடைந்திருந்த அப்பாவி தமிழ் மக்களை வெட்டியும், குத்தியும். சுட்டும். கொன்றனர். காடையர்களின் தாக்குதல்களுக்கு அஞ்சி ஆலய மூலஸ்தானத்திற்குள் ஓடிய பொதுமக்களையும் வெட்டிக்கொன்றனர்.

### ஆலயம் வெள்ளக்காடாக மாறியது

1990ஆண்டு விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் ஏற்பட்ட யுத்த சூழ் நிலையின் போது வீரமுனை கிராமத்தினை சூழவுள்ள வளத்தாப்பிட்டி, மல்வத்தை, மல்லிகைதீவு, வீரச்சோலை, ஆகிய பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்கள் வீரமுனை இராம கிருஸ்ண மிசன் வித்தியாலயம், வீரமுனை சிந்தாயாத்திரை பிள்ளையார் ஆலயம் மற்றும் கண்ணகியம்மன் ஆலயம் என்பனவற்றில் தஞ்சமடைத் திருந்தனர்

வீரமுனை தமிழ் கிராமத்தில் தமிழர்கள் மீது 1990ஆம் ஆணடில முஸ்லிம் ஆயுதக்குழுக்களால் நடத்தப்பட்ட ஒரு சில படுகொலைகளை திகதி வாரியாக இங்கே தருகிறேன்.

20.06.1990 வீரமுனை பிள்ளையார் கோவிலில் அதிரடிப்படையினரின் துணையுடன் முஸ்லிம் ஆயுதக்குழு 69 தமிழர்களை படுகொலை செய்தனர்.

05.07.1990 வீரமுனையில் 13 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

10.07.1990 வீரமுனையில் 15 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

16.07.1990 மல்வத்தை இராணுவத்தினரும் முஸ்லீம் ஊர்காவல்படையினருமாக சுமார் 30 பேர் சேர்த்து 8 பெண்களை பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்தனர்.

26.07.1990 வீரமுனையில் 23 சிறுவர்கள் உட்பட 32 இளைஞர்கள் முஸ்லீம் ஊர்காவல்படையினராலும் விசேட அதிரடிப்படையினராலும் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.
29.07.1990ல் 8 ஆசிரியர்கள் குடும்பத்துடன் பஸ் ஒன்றில் வீரமுனையை விட்டு வெளியேறிக்கொண்டிருந்த போது அவர்கள் அனைவரும் கடத்தி செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

01.08.1990 சவளக்கடையில் 18பேர் கடத்தப் பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

12.08.1990 வீரமுனை அகதி முகாமில் பகுந்த முஸ்லிம்குழு வாள்களால் வெட்டி தாக்குதல் நடத்தியது. இதில் ஆலய பரிபாலன சபை தலைவர் தம்பிமுத்து சின்னத்துரை உட்பட 14பேர் கொல்லப்பட்டனர். பலர் காயம டைந்தனர். வீரமுனையில் 600வீடுகளும், சம்மாந்துறை, மல்லிகைத் தீவு, வளத்தாப்பிட்டி கணபதிபுரம், மல்வத்தை ஆகிய கிராமங்களில் இருந்த 1352 தமிழர்களின் வீடுகளும் முஸ்லீம்களால் முற்றாக தீக்கிரை யாக்கப்பட்டது.
20,06.1980 இடைப்பட்ட காலத்தில் வீரமுனையில் மட்டும் 232 பொதுமகள் கொல்லப்பட்டதுடன் 1600க்கு மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டது.

20.06.1990 அன்று வீரமுனை பிள்ளையார் கோவியில் வைத்து அதிரடிப்படை மற்றும் முஸ்லீம்களால் 69 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 15.07.1990 வீரமுனையில் 13 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 10.07.1990 வீர முனையில் 15 தமிழர்கள் படுகொளை செய்யப்பட்டனர்.

### நீலாவணை படுகொலை

வீரமுனை ஆலயத்தில் தாக்குதல் நடத்தப்பட்ட 1990 ஒகஸ்ட் 12 திகதி அம்பாறை மட்டக்களப்பு எல்லைக்கிராயமான துறை நீலாவணையிலும் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் குழந்தைகள் பெண்கள் உட்பட 60 பேர் கொல்லப்பட்டனா்.

12.08.1990 அன்று காலை நீலாவணை கல்லாறு இராணுவ முகாமிலிருந்த இராணுவத் தினரும் அவர்களுடன் இணைந்திருந்த முஸ்லீம் ஊர்காவல் படையினரும் துறைநீலாவணை கிராமத்தை சுற்றி வளைத்து துப்பாக்கி பிரயோகம் செய்தனர். இத்துப்பாக்கி பிரயோகத்தில் வயது வேறுபாடு இன்றி விடுகளில் இருந்தவர்களும் வீதிகளில் சென்றவர்களும் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதில் 60 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இவர்களில் 47பேரின் பெயர் விபரங்கள் மட்டக்களப்பு சமாதான குழுவில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

கொல்லப்பட்டவர்களில் 12 பெண்களும் 6 சிறுவர்களும் அடங்குவர். அக்காலத்தில் இருந்த பதற்ற சூழலால் இவர்களுக்கு உரிய சடங்குகள் கூட செய்யப்படவில்லை. அனைவரும் ஒரே குழியில் போட்டு புதைக்கப்பட்டனர்.

### ஏறாவூர் வைத்தியசாலை படுகொலை

விரமுனை துறைநீலாவணை கிராமங்களில் தமிழர் படுகொலை செய்யப்பட்ட அதே தினமான 1990ஆம் ஆண்டு ஒகஸ்ட் 12 ஆம் திகதி மட்டக்களப்பு ஏறாவூர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த தமிழர்கள் படுகொலை செய்யப் பட்டனர். 1990ஆண்டு ஒகஸ்ட 11ஆம் திகதி அன்று இராணுவத்தினரும் முஸ்லிம் ஆயதக் குழுயும் இணைத்து செங்கலடி கிரான் போன்ற கிராமங்களை சுற்றிவளைத்து தமிழ் மக்கள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்தனர் இதில் சுமார் 15பேர் கொல்லப்பட்டனர். இந்துப்பாக்கி பிரயோ கத்தில் 12 பேர் காயமடைந்து ஏறாவூர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.
மறுநாள் 12.08.1990 அன்று இரவு 11 மணிக்கும் 12மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் ஏறாவூர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தமிழ் பொதுமக்கள்

மிகுதி 09 பக்கம் பார்க்க...



# உலக நீதி
## காசாவும் முள்ளிவாய்க்காலும்

“அனைத்துலக நீதியின் மாண்பு தராசில் தொங்கிக்கொண்டிருக்கிறது” இவ்வாறு அனைத்துலக நீதிமன்றத்தில் வைத்துக் கூறியிருப்பவர் தென்னாபிரிக்காவின் பிரதிநிதி.காசாவில் இஸ்ரேல் புரியும் இனப்படுகொலைக்கு எதிராகத் தென்னாபிரிக்கா உலக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறது. அந்த வழக்கின் தொடக்கத்தில் மேற்கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது. உலக நீதி மட்டுமல்ல மேற்கு நாடுகளின் அரசியல் அறமும் கூட தராசில் வைக்கப்பட்டிருக்கிறது. முழு உலகத்துக்கும் ஜனநாயகம் மனித உரிமைகள் போன்றவற்றின் மாண்பைக் குறித்து வகுப்பெடுக்கும் மேற்கு நாடுகளின் அரசியல் அறத்தை மிக இளைய ஜனநாயகங்களில் ஒன்று ஆகிய தென்னாபிரிக்கா கேள்விக்கு உள்ளாக்கியிருக்கிறது.காசாவில் இனப்படுகொலை நடந்து கொண்டிருக்கும் பொழுதே.ரத்தம் காய முன்பே,தென்னாபிரிக்கா வழக்குத் தொடுத்திருக்கின்றது. அதுபோல ஏற்கனவே மற்றொரு ஆபிரிக்க நாடாகிய காம்பியா மியான்மரில் ரோஹிங்கா முஸ்லிம்களுக்காக நீதி கேட்டு 2019 ஆம் ஆண்டு அனைத்துலக நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தது.

அனைத்துலக நீதிமன்றம் எனப்படுவது ஐநாவின் ஆறு பிரதான உறுப்புகளில் ஒன்று.ஐநாவின் நீதி பரிபாலனக் கட்டமைப்பு அது.ஐநாவின் ஏனைய உறுப்புக்கள் நியூயோர்க்கில் உள்ளன.ஆனால் அனைத்துலக நீதிமன்றம் நெதர்லாந்தின் தலைநகரமான ஹேக்கில் அமைந்துள்ளது.ஐநாவின் சுயாதீனமான உறுப்பாக அது கருதப்பட்டாலும் அதன் தீர்ப்புக்களின் அடுத்தடுத்த கட்டங்களைத் தீர்மானிப்பது ஐநா பொதுச் சபையும் பாதுகாப்புச் சபையுந்தான்.பாதுகாப்புச் சபையில் சக்தி



மிக்க நாடுகளுக்கு வீற்றோ அதிகாரம் உண்டு.எனவே அங்கு விவாதிக்கப்படும் தீர்ப்புகளின் மீது சக்தி மிக்க நாடுகள் வீற்றோ வாக்கைப் பிரயோகிக்க முடியும்.ரோஹியங்கா முஸ்லிம்களின் விடயத்தில் மியான்மருக்குச் சார்பாக சீனா அவ்வாறு வீற்றோ வாக்கைப் பிரயோகித்திருக்கிறது.அதுபோலவே இஸ்ரேலுக்கு எதிரான ஐநா தீர்மானங்களின் போதும் அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆதரவாக தன்னுடைய வீற்றோ அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கிறது. ஐநாவின் வரலாற்றிலேயே அமெரிக்கா அதிகம் எண்ணிக்கையிலான வீற்றோ வாக்குகளைப் பிரயோகித்தது இஸ்ரேலுக்கு ஆதரவாகத்தான் என்று ஒரு கணக்கு உண்டு.

எனவே ஐநாவின் உறுப்புக்களில் ஒன்று என்ற அடிப்படையில் அனைத்துலக நீதிமன்றம் ஐநாவுக்குள்ள எல்லா வரையறைகளையும் பலவீனங்களையும் இயலாமைகளையும் கொண்டிருக்கும். இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்தே, குறிப்பாக மியான்மருக்கு எதிராக கம்பியா தொடுத்த வழக்கின் கடந்த நான்கு ஆண்டுகால அனுபவத்தின் பின்னணியில் வைத்தே தென்னாபிரிக்கா இஸ்ரேலுக்கு எதிராக தொடுத்திருக்கும் வழக்கையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ரோஹியங்கா முஸ்லிம்களுக்கு கடந்த நான்கு ஆண்டுகளாக பொருத்தமான நீதி வழங்கப்படவில்லை.ஐநா உருவாக்கப்பட்டதிலிருந்து அது பெருமளவுக்கு இனப்படுகொலைகளின் பார்வையாளராகத்தான் இருந்து வந்துள்ளது.ஐநாவின் இயலாமையை, கையாலாகத்தனத்தை நிரூபிக்கும் ஆகப்பிந்திய இனப்படுகொலைக் களந்தான் காசா. தென்னாபிரிக்கா தொடுத்திருக்கும் வழக்கின் மூலம் பலஸ்தீனர்களுக்கு நீதி கிடைக்குமா? அல்லது அந்த வழக்கு ஐநாவின் கையாலாகத்தனத்தை மீண்டும் ஒரு தடவை நிரூபிக்குமா?

ஏனெனில்,உலகில் தூய நீதி என்று எதுவும் கிடையாது இருப்பதெல்லாம் அரசியல் நீதிதான்.நீதிபதிகள் தனிப்பட்ட முறையில் நீதியாக நடக்கலாம். ஆனால் அந்த நீதியை நடைமுறைப்படுத்தப் போவது அரசுகள்தான். அரசுகள்,நலன்களின் அடிப்படையில்தான் முடிவுகளை எடுக்கும்.அரசியலில் அறம் நீதி என்பவையெல்லாம் கிடையாது. நிலையான ராணுவப் பொருளாதார நலன்கள்தான் உண்டு.அது சார்ந்த முடிவுகள்தான் உண்டு. அதனால்தான் அமெரிக்க அறிஞராகிய நோஆம் சொம்ஸ்கி பின்வருமாறு சொன்னார்.அரசியல் அறத்தைக் கடைப்பிடிக்கும் காலம் வரும்வரை இனப்படுகொலை என்ற சொல்லை அகராதியில் இருந்து எடுத்துவிடுவதே நல்லது என்று.

தென்னாபிரிக்கா தொடுத்திருக்கும் வழக்கு இஸ்ரேலுக்கு மட்டும் எதிரானது அல்ல. இஸ்ரேலை ஆதரிக்கும் எல்லா மேற்கு நாடுகளுக்கும் எதிரானதுதான். அனைத்துலக நீதிமன்றத்தை ஸ்தாபிக்கும்பொழுது அதில் முக்கிய பங்களிப்பை நல்கியது அமெரிக்காவும் பிரித்தானியாவுந்தான். அதே நாடுகள் இப்பொழுது தென்னாபிரிக்காவின் நகர்வை ஆதரிக்கவில்லை.எந்த ஒரு மேற்கத்திய நாடும் இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் அனைத்துலக நீதிமன்றத்



நிலாந்தன்

மிகுதி 09 பக்கம் பார்க்க...

மிக்க நாடுகளுக்கு வீற்றோ அதிகாரம் உண்டு.எனவே அங்கு விவாதிக்கப்படும் தீர்ப்புகளின் மீது சக்தி மிக்க நாடுகள் வீற்றோ வாக்கைப் பிரயோகிக்க முடியும்.ரோஹியங்கா முஸ்லிம்களின் விடயத்தில் மியான்மருக்குச் சார்பாக சீனா அவ்வாறு வீற்றோ வாக்கைப் பிரயோகித்திருக்கிறது.அதுபோலவே இஸ்ரேலுக்கு எதிரான ஐநா தீர்மானங்களின் போதும் அமெரிக்கா இஸ்ரேலுக்கு ஆதரவாக தன்னுடைய வீற்றோ அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கிறது. ஐநாவின் வரலாற்றிலேயே அமெரிக்கா அதிகம் எண்ணிக்கையிலான வீற்றோ வாக்குகளைப் பிரயோகித்தது இஸ்ரேலுக்கு ஆதரவாகத்தான் என்று ஒரு கணக்கு உண்டு.

எனவே ஐநாவின் உறுப்புக்களில் ஒன்று என்ற அடிப்படையில் அனைத்துலக நீதிமன்றம் ஐநாவுக்குள்ள எல்லா வரையறைகளையும் பலவீனங்களையும் இயலாமைகளையும் கொண்டிருக்கும். இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்தே, குறிப்பாக மியான்மருக்கு எதிராக கம்பியா தொடுத்த வழக்கின் கடந்த நான்கு ஆண்டுகால அனுபவத்தின் பின்னணியில் வைத்தே தென்னாபிரிக்கா இஸ்ரேலுக்கு எதிராக தொடுத்திருக்கும் வழக்கையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ரோஹியங்கா முஸ்லிம்களுக்கு கடந்த நான்கு ஆண்டுகளாக பொருத்தமான நீதி வழங்கப்படவில்லை.ஐநா உருவாக்கப்பட்டதிலிருந்து அது பெருமளவுக்கு இனப்படுகொலைகளின் பார்வையாளராகத்தான் இருந்து வந்துள்ளது.ஐநாவின் இயலாமையை, கையாலாகத்தனத்தை நிரூபிக்கும் ஆகப்பிந்திய இனப்படுகொலைக் களந்தான் காசா. தென்னாபிரிக்கா தொடுத்திருக்கும் வழக்கின் மூலம் பலஸ்தீனர்களுக்கு நீதி கிடைக்குமா? அல்லது அந்த வழக்கு ஐநாவின் கையாலாகத்தனத்தை மீண்டும் ஒரு தடவை நிரூபிக்குமா?

ஏனெனில்,உலகில் தூய நீதி என்று எதுவும் கிடையாது இருப்பதெல்லாம் அரசியல் நீதிதான்.நீதிபதிகள் தனிப்பட்ட முறையில் நீதியாக நடக்கலாம். ஆனால் அந்த நீதியை நடைமுறைப்படுத்தப் போவது அரசுகள்தான். அரசுகள்,நலன்களின் அடிப்படையில்தான் முடிவுகளை எடுக்கும்.அரசியலில் அறம் நீதி என்பவையெல்லாம் கிடையாது. நிலையான ராணுவப் பொருளாதார நலன்கள்தான் உண்டு.அது சார்ந்த முடிவுகள்தான் உண்டு. அதனால்தான் அமெரிக்க அறிஞராகிய நோஆம் சொம்ஸ்கி பின்வருமாறு சொன்னார்.அரசியல் அறத்தைக் கடைப்பிடிக்கும் காலம் வரும்வரை இனப்படுகொலை என்ற சொல்லை அகராதியில் இருந்து எடுத்துவிடுவதே நல்லது என்று.

தென்னாபிரிக்கா தொடுத்திருக்கும் வழக்கு இஸ்ரேலுக்கு மட்டும் எதிரானது அல்ல. இஸ்ரேலை ஆதரிக்கும் எல்லா மேற்கு

# உலக நீதி காசாவும் முள்ளிவாய்க்காலும்

நாடுகளுக்கும் எதிரானதுதான். அனைத்துலக நீதிமன்றத்தை ஸ்தாபிக்கும்பொழுது அதில் முக்கிய பங்களிப்பை நல்கியது அமெரிக்காவும் பிரித்தானியாவுந்தான். அதே நாடுகள் இப்பொழுது தென்னாபிரிக்காவின் நகர்வை ஆதரிக்கவில்லை. எந்த ஒரு மேற்கத்திய நாடும் இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் அனைத்துலக நீதிமன்றத்தில் தென்னாபிரிக்கா தொடுத்திருக்கும் வழக்கை ஆதரிக்கவில்லை.

ஆனால் அதே மேற்கு நாடுகள்தான் ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக தீர்மானங்களை நிறைவேற்றி வருகின்றன. இதை எப்படி விளங்கிக் கொள்வது?
இஸ்ரேலுக்கு எதிராக வழக்குத் தொடுத்திருக்கும் தென்னாபிரிக்காவும் மியான்மருக்கு எதிராக வழக்குத் தொடுத்திருக்கும் காம்பியாவும் ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ளன. இந்த நாடுகள் எவையும் உக்ரைனில் ரஷ்யா முன்னெடுக்கும் ஆக்கிரமிப்புப் போரை எதிர்த்து வழக்கு தொடுக்கவில்லை. அது மேற்கு நாடுகளுக்கு எதிரான ஆபிரிக்க நிலைப்பாடு. ரஷ்யா ஆபிரிக்க கண்டத்தை அதிகம் அரவணைத்து வைத்திருக்கின்றது. அங்குள்ள முன்னால் பிரெஞ்சுக் கொலனிகளில் நடக்கும் ராணுவச் சதிப் புரட்சிகளின் பின்னணியில் ரஷ்சியாவின் மறைகரங்கள் இருப்பதாக ஊகங்கள் உண்டு.

அதேசமயம் காசாவில் நடப்பது இனப்படுகொலை என்று சொல்லாத மேக்கு நாடுகள், அதற்கு எதிராக வழக்கு தொடுத்திருக்கும் தென்னாபிரிக்காவை ஆதரிக்காத மேற்கு நாடுகள், ரஷ்ய-உக்ரைன் போரில் ரஷ்யா இனப்படுகொலை செய்வதாகக் குற்றம் சாட்டின. போர் தொடங்கிய குறுகிய காலத்துக்குள்ளேயே அமெரிக்கா அதை இனப்படுகொலை என்று சொன்னது. அது ரஷ்யாவுக்கு எதிரான அமெரிக்காவின் நிலைப்பாடு.

பேரரசுகள் மட்டுமல்ல சிறிய அரசுகளும்கூட அறம் சார்ந்து அரசியல் முடிவுகளை எடுப்பதில்லை. உதாரணமாக தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாகிய பொழுது, பலஸ்தீனம் தமிழ் மக்களுடன் நிற்கவில்லை. பாலஸ்தீன அதிகார சபையானது மஹிந்த ராஜபக்சவின் நண்பனாகத்தான் காணப்படுகின்றது. 2009க்கு பின்னர் 2014ஆம் ஆண்டு பாலஸ்தீனம் மகிந்தவிற்கு அந்த நாட்டின் உயர் விருதாகிய “பலஸ்தீன நட்சத்திரம்” என்ற விருதை வழங்கியது. அங்குள்ள வீதி ஒன்றுக்கும் அவருடைய பெயரைச் சூட்டியது. அதாவது ஈழத் தமிழர்களால் இனப்படுகொலை தெரிந்தவர் என்று குற்றச்சாட்டப்படும் ஒருவருக்கு பலஸ்தீனம் நாட்டின் உயர் விருதை வழங்கியிருக்கிறது. இதை எப்படி விளங்கிக் கொள்வது?
அப்படித்தான் கியூபாவும். ஒரு காலம் போராடும் இயக்கங்களுக்கு அது முன்மாதிரியாக இருந்தது. ஈழப் போராட்ட இயக்கங்கள் சில தமது பொறுப்பாளர்களுக்கு கஸ்ட்ரோ என்று பெயர் வைத்தன. ஆனால் 2009க்கு முன்னரும் பின்னரும் குறிப்பாக ஐநாவில் கியூபா யாருடைய பக்கம் நிற்கின்றது? ஐநா தீர்மானங்களின் போது கியூபா அரசாங்கத்திற்கு ஆதரவாகத் தான் வாக்களித்து வருகின்றது. இதை எப்படி விளங்கிக் கொள்வது?

அதாவது மேற்கண்டவைகளைத் தொகுத்துப் பார்க்கும்போது தெளிவாக தெரிவது என்னவென்றால், சக்தி மிக்க நாடுகளோ அல்லது சிறிய நாடுகளோ எவையானாலும் அறத்தின் பாற்பட்டோ நீதியின் பாற்பட்டோ முடிவுகளை எடுப்பது குறைவு. பெருமளவுக்கு நிலையான அரசியல் நலன்களின் அடிப்படையில்தான் அவை முடிவுகளை எடுக்கின்றன. இப்படிப்பட்டதொரு குரூர உலகில் பலஸ்தீனர்களுக்கு அனைத்துலகை நீதிமன்றம் எப்படிப்பட்ட ஒரு நீதியை வழங்கும்?

தென்னாபிரிக்காவின் நகர்வை, ஆபிரிக்கக் கண்டத்தில் தற்பொழுது மேலோங்கிக் காணப்படும் மேற்கத்திய நாடுகளுக்கு எதிரான உணர்வுகளின் பிரதிபலிப்பாகவும் விளங்கிக் கொள்ளலாம். எனினும் எல்லாவிதமான வாதப்பிரதிவாதங்களுக்கும் அப்பால் அது இனப்படுகொலைக்கு உள்ளாக்கி கொண்டிருக்கும் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவது. தாங்கள் தனித்துவிடப்படவில்லை என்ற உணர்வை அது அவர்களுக்கு கொடுக்கும். இந்த விடயத்தில் பலஸ்தீனர்கள் ஈழத் தமிழர்களை விடவும் பாக்கியசாலிகள் என்று கூறலாமா?
ஏனெனில், இறுதிக்கட்டப் போரில் வன்னி கிழக்கில் தமிழ்மக்கள் சுற்றி வளைக்கப்பட்டிருந்தார்கள். யாரும் உதவிக்கு வரவில்லை. எந்த ஒரு நாடும் உத்தியோகபூர்வமாக அவர்களை ஆதரிக்கவில்லை. தென்னாபிரிக்கா ஆதரிப்பதாகக் கூறப்பட்டாலும் நடைமுறையில் எதுவும் நடக்கவில்லை. தனது சேவைக் காலத்தில் தான் கண்ட மிக மோசமான நரகம் அதுவென்று அப்பொழுது ஐ.சி.ஆர்.சியின் தென்னாசியாவுக்குப் பொறுப்பான அதிகாரி கூறினார். உதவிக்கு யாரும் வராத அந்த ஒடுங்கிய கடற்கரையில் தனித்து விடப்பட்டிருந்த தமிழ் மக்களுக்கு எதிராக உலகின் பெரும்பாலான நாடுகள் ஒன்றாக நின்றன. அல்லது ஈழத் தமிழர்களுக்கு எதிரான தரப்புக்களோடு நேரடியாகவோ மறைமுகமாகவோ கூட்டுச் சேர்ந்திருந்தன. ஐநா போரில் நேரடியாகத் தலையிடாமல் விட்டதன்மூலம் இனப்படுகொலையை மறைமுகமாக அங்கீகரித்தது.

இந்தியாவும் சீனாவும் பிராந்தியத்தில் ஒன்றுக்கொன்று நட்பு நாடுகள் அல்ல. ஆனால் இரண்டு நாடுகளுமே ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஒரே கோட்டில் நின்றன. இந்தியாவும் பாகிஸ்தானும் பிராந்தியத்தில் எதிரிகள். ஆனால் ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஒரே கோட்டில் நின்றன. சீனாவும் அமெரிக்காவும் உலக அளவில் நட்பு நாடுகள் அல்ல. ஆனால் ஈழத் தமிழர்களுக்கு எதிராக இரண்டும் ஒன்றாக நின்றன. உலகில் பிராந்திய மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் தங்களுக்கு இடையே பகைவர்களாகக் காணப்படும் நாடுகள் ஈழத் தமிழர்களுக்கு எதிராக ஒன்றாக நின்றன. அப்பொழுது எந்த ஒரு நாடும் அதை இனப்படுகொலை என்று கூறவில்லை. இப்பொழுதும் எத்தனை நாடுகள் கூறுகின்றன? அனைத்துலக நீதியின் மீது நம்பிக்கையிழந்த பின்னரும்கூட கடந்த 15 ஆண்டுகளாக விடாமல் போராடும் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக வழக்குத் தொடுக்க இக்கொடிய உலகில் யாருண்டு?

**விளம்பர** தொடர்புகளுக்கு
**Mobile : +94 76 567 3339**

# கிழக்கில் சிவந்த சுவடுகள் 2



## வீரமுனை படுகொலை

12பேரையும் வைத்தியசாலைக்குள் வைத்தே முஸ்லீங் கள் வெட்டிக்கொன்றனர். இராணுவத்தினருடன் சென்ற முஸ்லிம்களே அப்பொது மக்களை வெட்டி கொன்றனர் இப்படுகொலையிலிருந்து தப்பிவந்த பொதுமக்கள் தெரிவித்திருந்தார்.

இச்சம்பவம் நடந்து இரண்டு நாள் கழித்து 1990 ஒகஸ்ட் 14ஆம் திகதி மட்டக்களப்பு கோரவெளி, சச்சையடித்தீவு கிராமங்களில் இராணுவத்தினருடன் புகுந்த முஸ்லீம் ஆயுதக் குழுக்கள் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தினர். இத்துப்பாக்கி பிரயோகங்களில் வீடுகளில் இருந்தவர்கள் வீதிகளில் சென்றவர்கள், வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் என 18பேர் கொல்லப்பட்டனர் 25க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். கல்லடி செங்கலடி ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து சென்ற இராணுவத்தினரும் ஏறாவூரில் இருந்த முஸ்லிம் ஆயுதக் குழுவுமே இத்தாக்குதலை நடத்தினர்.

### கல்முனை படுகொலை

இதேபோன்று 1990 ஒகஸ்ட் 11ஆம் திகதி கல்முனையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ் பெண்கள் மீது பாலியல் பலாத்காரம் புரியப்பட்டது. பாண்டிருப்பு கல்முனை. சேனைக்குடியிருப்பு ஆகிய கிராமங்களில் உள்ள வீடுகள் மீது துப்பாக்கி பிரயோகம் செய்து மக்களை வீடுகளை விட்டு வெளியில் வருமாறு எச்சரித்தனர ஆண்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் கையை உயரத்திவாறு வெளியில் வந்தனர். பெண்கள் தமது குழந்தைகளை இறுகப் பற்றிய படி வெளியில் வந்தனர் 25ஆண்களை இராணுவத்தினர் காரைதீவு முகாமுக்கு கொண்டு சென்றனர் தமது பிள்ளைகள் மற்றும் கணவனாரை விடுமாறு பின்னால் சென்ற பெண்கள் தாக்கப்பட்டனர்.
அடுத்த நாள் இராணுவம் கொண்டு சென்ற பொதுமக்களின் உறவினர்கள் கல்முனை நகரிலிருந்து காரைதீவு இராணுவ முகாமுக்கு செல்ல முற்பட்ட போது அங்கு வந்த இராணுவத்தினர் அவர்களை தடுத்து நிறுத்தினர். அங்கு பெண்கள் வயோதிபர்கள் சிறுவர்கள் என பெருந்தொகையானோர் கூடியிருந்தனர். அங்கிருந்த இளம் பெண்களை தெரிவு செய்து அருகில் இருந்த கட்டிடத்திற்குள் கொண்டு சென்று பாலியல் பலாத்காரம் செயதனர். ஆண்களை இராணுவத்தினர் சித்திரவதை செய்தனர் பின்னர் அவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். அங்கு இரு மணித்தியாலங்களில் 37பொதுமக்கள் கொல்லப்பட்டனர். முதல் நாள் காரைதீவு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்ட 25 பொதுமக்களும் கொல்லப்பட்டனர். அவர்களின் சடலங்களை கூட கொடுக்காது எரித்து விட்டனர். 11ஆம் திகதி 12ஆம்திகதி ஆகிய இரு தினங்களில் மட்டும் கல்முனையில் 62 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

**தொடரும்...**

## கிழக்கில் நடாத்தப்பட்ட முதலாவது கூட்டுப்படுகொலை!

**கல்லோயா சிங்கள குடியேற்றத்திட்டம்:**
கல்லோயா குடியேற்ற திட்டம் என்பது நிலங்களற்ற வெளிமாவட்ட சிங்களவர்களை காடுகளாக இருந்த சில இடங்களில் குடியேற்றுவதற்காக 1919 ஆம் ஆண்டு தொடங்கிய திட்டம் ஆகும். இலங்கை சுதந்திரமடைந்த பின் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த கிழக்கு மாகாணம் சிங்கள அரச தரப்பால் இலக்கு வைக்கப்பட்டது.
இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ஓடிய கல்லோ அணைக்கட்டு ஆக்கப்பட்டு, 40ஆயிரம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யும் வகையில் சிங்களவர்கள்: குடியேற்றப்பட்டனர். 1956 ஆம் ஆண்டளவில் இக்குடியேற்றத் திட்டத்தில் 50 புதிய ஊர்கள் உருவாக்கப்பட்டிருந்தது அந்த ஊர்களுக்கு சிங்களப்பெயர்கள் சூட்டப்பட்டது.
முன்னர் தமிழ்ப் பகுதிகளாக இருந்த இடங்களில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டதனால் இரு பகுதிகளுக்கும் இடையில் அங்கு ஆங்காங்கே சிறு சிறு கலவரங்கள் தொடங்கி இருந்தன.
காலி முகத்திடலில் தமிழ் தலைவர்கள் மேற்கொண்ட அறவழிப் போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்திய சிங்களவர்கள் கொழும்பிலும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

இச்செய்தி கல்லோயாப் பகுதியை எட்டியதை அடுத்து, 1956 ஜூன் 11 ஆம் திகதி மாலை அங்கும் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. சிங்களவர்கள் கத்திகள், வாள்கள், பொல்லுகள் சகிதம் தமிழர்களைத் தேடி கல்லோயா பள்ளத்தாக்கின் வீதிகளில் அலைந்தார்கள் என தர்ஜி வித்தாச்சி தனது நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.
தமிழருக்குச் சொந்தமான பல சொத்துக்கள் சேதமாக்கப்ப எரிக்கப்பட்டன. சிங்களப் பெண் ஒருத்தி தமிழர்களால் பாலின வன்முறைக்குள்ளாக்கப்பட்டதாகவும். ஆயுதம் தாங்கிய 6.000 தமிழர்கள் சிங்களக் குடியேற்றத் திட்டத்தை நோக்கி வருவதாகவும் பொய் வதந்திகளை சிங்களவர் பரப்பினர். இதனை அடுத்து சிங்களவர்கள் அரச வண்டிகளில் ஏறி தமிழர் குடியேற்றங்களை நோக்கிக் கிளம்பினர்.
இங்கினியாகல என்ற குடியேற்றத்திட்ட கிராமத்திலும் அதனைச் சுற்றியுள்ள கரும்புத் தோட்டங்களிலும் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் சிங்களவர்களால் படுகொலை செய்யப்பட்டனர். பலர் கூரிய ஆயுதங்களால் வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர், அரைகுறை உயிருடன் இருந்தவர்களையும் இறந்தவர்களின் சடலங்களையும் தீயில் தூக்கி வீசினார்கள். இதில் 157 தமிழ் தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதுவே இலங்கை வரலாற்றில் முதன் முதலில் பெருந்தொகையாக படுகொலை செய்யப்பட்ட சம்பவமாகும்.

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழவில்இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME

# ரஷ்யாவுக்கும் தோழன்! அமெரிக்காவுக்கும் நண்பன் !! தென்னாசிய வல்லரசு இந்தியா !!!

**“வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு இந்தியாவின் முக்கியத்துவம் சர்வதேச ரீதியில் உணர்த்தப்பட்டு வருகிறது. ரஷ்யாவுக்கும் தோழனாக, அமெரிக்காவுக்கும் நண்பனாக, இலகுவில் எவரையும் கைக்குள் போட்டுக் கொள்ளும் இராஜதந்திரம், தென்னாசிய வல்லரசாக இந்தியா எழுச்சியுருவதை காணலாம்,,**

உலகின் பல்வேறு நாடுகளும் ஒன்று அமெரிக்காவுக்கு ஆதரவு நிலைப்பாட்டை எடுத்திருக்கும். அல்லது ரஷ்யாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்திருக்கும். ஆனால், இந்தியா மட்டுமே இரு நாடுகள் உடனும் நல்லுறவை இறுக்கமாகவைத் துள்ளது.

இதற்கான காரணம் என்பது குறித்துப் பார்க்கலாம். இந்திய நாடு சுதந்திரம் பெற்றது முதலே ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே நல்லுறவு இருக்கிறது. 2000களில் இந்தியா அமெரிக்கா இடையேயான உறவும் வலுவானது. இருப்பினும், இந்தியா அமெரிக்கா உறவு என்பது இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே இருக்கும் உறவைப் பாதிக்கவில்லை.

## இந்தியா அமெரிக்கா உறவு:

இதன் காரணமாகவே உக்ரைன் போர் விவகாரத்தில் இந்தியா நடுநிலை நிலைப் பாட்டை எடுத்தது. உலகின் பல்வேறு நாடுக ளும் கூட ரஷ்யா மீது பொருளாதாரத் தடை களை விதித்தாலும் இந்தியா அதுபோல எந்த வொரு தடையையும் விதிக்கவில்லை. இதன் மூலம் இந்தியாவால் இரு முக்கிய நாடுகளான அமெரிக்கா மற்றும் ரஷ்யா இரு



தரப்பிடமும் நல்லுறவை வைத்திருக்க முடிந்தது.

21ஆம் நூற்றாண்டில் இந்தியா அமெரிக் காவின் வெளியுறவுக் கொள்கைக்கு மிக முக்கியமானதாக அமைந்ததுள்ளது. நூறு கோடி மக்கள் நிறைந்ததும், இந்திய துணைக் கண்டத்தில் ஆதிக்கமுடையது மான இந்தியா, வளர்ந்து வரும் வல்லரசாக வும், அமெரிக்காவிற்கு இன்றியமையாத சகோதர நாடாகவும், சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கை எதிர்கொள்ளத்தக்கதாக வும் கருதப்படுகிறது.

இதேவேளை 2004 - 2008 வரையி லான காலத்தில் இருதரப்பு வர்த்தகமும் மும்மடங்காக உயர்ந்துள்ளது. கேல்லப் என்ற நிறுவனம் நடத்திய பொது கருத்துக் கணிப்பின்படி, அமெரிக்கர்கள் உலகில் உள்ள நாடுகளிலேயே இந்தியாவை ஏழா வது அபிமான நாடாக கருதுகின்றனர். அமெரிக்காவில் பயிலும் பன்னாட்டு மாண வர்களுள், இந்திய மாணவர்கள் இரண்டா வது பெரிய எண்ணிக்கையாகும்.

## ரஷ்யா மசகு எண்ணெய் இறக்குமதி

இந்தியா தனது மசகு எண்ணெய் தேவை யைப் பூர்த்தி செய்ய ரஷ்யாவை அதிகம் நம்பி இருக்கிறது. ரஷ்யாவிலிருந்து இந்தியாவின் மசகு எண்ணெய் இறக்குமதி என்பது இவ்வருட அக்டோபர் மாதத்தில் திடீரென உயர்ந்துள்ளதாக இந்திய மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சகம் தெரிவித் துள்ளது.

இந்தியாவின் ஒட்டுமொத்த எண்ணெய் இறக்குமதியில் சுமார் மூன்றில் ஒரு பங்கை ரஷ்யாவில் இருந்து தான் வாங்குகிறார்கள்.

ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யும் மசகு எண்ணெய் மதிப்பு $3.78 பில்லியனாக உயர்ந்துள்ளது. இது கடந்த ஆண்டு இதே மாதத்தில் $2.62 பில்லியனாக இருந்த நிலையில், இந்தாண்டு இறக்குமதி அதைக் காட்டிலும் 44% அதிகரித்துள்ளது.

கடந்த செப்தம்பர் மாதம் முதலே ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் மசகு எண் ணெய் அளவு தொடர்ந்து அதிகரித்து வரு கிறது. ஓராண்டில் மசகு எண்ணெய் இறக்கு மதி சுமார் 9% வரை அதிகரித்துள்ளது.

## ரஷ்யா மீது பொருளாதார தடை:

இந்தியாவைப் பொறுத்தவரை மசகு எண் ணெய் தேவையை பெரும்பாலும் இறக்குமதி மூலமாகவே பூர்த்தி செய்கிறது. இவ்வருட டிசம்பர் மாதத்திற்கான இந்திய நாட்டின் மொத்த எண்ணெய் இறக்குமதி செலவு என்பது 12.43 பில்லியன் டாலராக இருக் கிறது. இது முந்தைய மாதத்தின் 10.42 பில்லியன் டாலரை காட்டிலும் அதிகமாகும்.

ரஷ்யா உக்ரைன் போருக்குப் பிறகு உலகின் பல்வேறு நாடுகளும் ரஷ்யா மீது பொருளா



தாரத் தடைகளை விதித்தன. அத்துடன் ரஷ்யாவிடம் மசகு எண்ணெய் வாங்கவும் மறுத்தன. ஆனால் இந்த காலகட்டத்தில் தான் இந்தியா ரஷ்யாவில் இருந்து அதிகப்படி யான மசகு எண்ணெய்யை இறக்குமதி செய்ய ஆரம்பித்தது.

மற்ற நாடுகள் வாங்க மறுத்ததால் இந்தியா வால் மிகக் குறைந்த விலையில் மசகு எண்ணெய்யை வாங்க முடிந்தது.

கடந்தாண்டு பேரல் ஒன்றுக்கு 30 டாலர் வரை மலிவாக கிடைத்த நிலையில், இந்தாண்டு அந்த சலுகை என்பது $5-6 டால ராக குறைந்துள்ளதாக வல்லுநர்கள் கூறு கின்றனர்.

ரஷ்யாவுக்கு அடுத்து ஈராக் நாட்டில் இருந்து தான் அதிகம் மசகு எண்ணெய்யை இறக்கு மதி செய்கிறது. கடந்த அக்டோபர் மாதம் $2.83 பில்லியன் மதிப்பிலான மசகு எண் ணெய் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட் டுள்ளது. இது முந்தைய ஆண்டின் இதே மாதத்தில் இறக்குமதி செய்யப்பட்ட $2.64 பில்லியனில் இருந்து 7.18% அதிகமாகும்.

இந்த இரு நாடுகளைத் தவிர சவுதி அரேபியா, ஐக்கிய அமீரகம் மற்றும் நைஜீரியா நாடுக ளிடம் இருந்தும் முறையே $1.72 பில்லியன், $1.23 பில்லியன் மற்றும் $7.76 பில்லியன் மதிப்பிலான மசகு எண்ணெய்யை இந்தியா இறக்குமதி செய்வது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் மசகு எண்ணெய் இறக்குமதி

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சவுதி அரேபியாவில் இருந்து இறக்குமதி 5.87% அதிகரித்துள்ளது. அதேநேரம் ஐக்கிய அமீரகம் மற்றும் நைஜீரியாவில் இருந்து செய்யப்படும் இறக்குமதி முறையே 27.94% மற்றும் 24.97% குறைந்துள்ளது. இது மசகு எண்ணெய் தேவைக்கு எந்தளவுக்கு ரஷ்யா வை சார்ந்து இருக்கிறது என்பதைக் காட்டு கிறது.

உலகின் மூன்றாவது பெரிய மசகு எண் ணெய் இறக்குமதியாளரான இந்தியா இது நாள் வரை பெரும்பாலும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து அதிகம் இறக்குமதி செய்துள்ளது. ரஷ்யாவில் இருந்து மசகு எண்ணெய்யை எடுத்து வரச் செலவு அதிகம் ஆகும் என்பதால் அரிதாகவே ரஷ்யாவிலி ருந்து கொள்முதல் செய்தது.

ஆனால், உக்ரைன் போருக்குப் பிறகு மலிவு விலையில் மசகு எண்ணெய் கிடைத்



மிகுதி 11 பக்கம் பார்க்க...

# ரஷ்யாவுக்கும் தோழன்!

# அமெரிக்காவுக்கும் நண்பன்!!

# தென்னாசிய வல்லரசு இந்தியா!!!

ததால் இந்தியா ரஷ்யாவில் இருந்து தனது கொள்முதலை அதிகப்படுத்தியது.

### இந்திய-அமெரிக்க உறவில் முன்னேற்றம்:

அணிசேரா இயக்கத்தை உருவாக்கிய நாடுகளில் ஒன்றாக இந்திய இருந்தாலும், இந்தியா, பனிப்போரின் பொழுது சோவியத் ஒன்றியத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்தி ருந்தது. இது அமெரிக்க ஐக்கிய நாட்டினுடனான உறவில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியது.

1991-இல் சோவியத் ஒன்றியம் கலைக்கப் பட்ட பிறகு இந்தியா, அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளினுடனான தனது வெளியுறவுக் கொள்கைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தது. இதன் காரணமாக இந்திய வர்த்தகம், பொருளாதாரம், கணினி நிறுவனங்களின் இணைப்பு ஆகியவை மேம்படத் தொடங்கியது.

மேலும் இந்தியாவின் அணுசக்தி திட்டம் பற்றியான தனது கொள்கையை அமெரிக்கா மாற்றிக்கொண்டது. தற்காலத்தில் இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து கலாசாரம், ராணுவம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் மிகுந்த பங்களிப்புகளில் ஈடுபடுகின்றன.

பிரதமராக மோடி பொறுப்பேற்ற பின்னர் இந்திய-அமெரிக்க உறவில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவின் நெருக்கமான நண்பனாக இந்தியா மாறிவரு கிறது என்பதும் உண்மையே. அத்துடன் சர்வதேச பொருளாதார நெருக்கடி, உக்ரைன் போர், சமீபத்திய சர்வதேசப் பிரச்சினைகளுக்கான தீர்வாக இந்தியா உடனான உறவு மேலும் வலுப்பெற வேண்டும் என அமெரிக்க அதிபர் பைடன் அடிக்கடி கூறிவருகிறார்.

### சோவியத் பனிப் போர் :

இந்தியா விடுதலை அடைந்து முதல் பல வருடங்கள் வரை, இரு நாடு உறவுகளும் சிறப்பாக இருந்தன. அமெரிக்கா இந்தியாவிற்கு பல்லாயிரம் கோடி மதிப்பிலான உணவுகளையும் சலுகைகலையும் வளர்ச்சி நிதிகளையும் கொடுத்தது.
இந்திய-சீனப் போரின் பொழுதும் கென்னடி அரசு இந்தியாவிற்கு வெகுவாக உதவி செய்தது.

ஆனால்,1963ல் நிக்சன் பதவியேற்றதும் இரு நாடுகளின் உறவு சரியத் தொடங்கியது. இந்திரா காந்தியின் தலைமையில் கீழான இந்தியாவும் சோவியத் ஒன்றியத்துடன் இணக்கமாக செயல்படத் தொடங்கியது. அதே சமயம் அமெரிக்கா பாகித்தானுடன் இணையத் தொடங்கியது.

1971ஆம் ஆண்டு நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் போரில் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவித்தது. இந்தியாவை அச்சுறுத்த அமெரிக்கா தனது விமானம்-தாங்கி கப்பல் USS Enterp சளைந-ஐ வங்காள விரிகுடாவில் நிறுத்தி யது. 1974-ல் இந்தியா தனது முதல் அணு ஆயுத சோதனையை சிரிக்கும் புத்தர் என்ற பெயரில் நடத்தியது. அமெரிக்கா இதனை வலுவாக எதிர்த்தது.

### இந்தியா மீது பொருளாதார தடை:

அடல் பிகாரி வாச்பாய் இந்தியாவின் பிரதமராக பதவியேற்றதும் போக்ரானில் அணு ஆயுத சோதனை நடத்த அனுமதி அளித்தார். இதன் காரணமாக அமெரிக்கா இந்தியா மீது பல பொருளாதார தடைகளை விதித்தது.

ஆனால் ஜப்பானைத் தவிர வேறு எந்த நாடும் இதனை மதிக்காததால் தடைகள் வெகு சீக்கிரமே நீக்கப்பட்டன. பிறகு இரு நாடுகளும் உறவை மேம்படுத்த இணைந்து செயல்படத் தொடங்கின.

இரு நாடுகளின் இராணுவ உறவுகளும் சுதந்திரம், ஜனநாயகம், சட்ட ஒழுங்கை கடைப்பிடித்தல், பொதுவான பாதுகாப்பு நலன்கள், ஆகியவையின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை நிலைநாட்டுவது, வன்முறை தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தை தோற்கடிப்பது, பேரழிவு ஆயுதங்கள் மற்றும் அதில் தொடர்புடைய பொருட்கள், தரவு, மற்றும் தொழில்நுட்பங்கள் பரவுவதை தடுப்பது, மற்றும் வர்த்தகத்தை பாதுகாப்பது ஆகியவைய இதனுள் அடங்கும்.

### இரு நாடு இராணுவ உறவு:

2001 ஆம் ஆண்டின் செப்டம்பர் இறுதியில், அமெரிக்க அதிபர் புஷ் அணு ஆயுத பரவல் தடை தடுப்பு சட்டத்தின் கீழ் இந்தியா மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதார தடைகளை முற்றிலுமாக விலக்கினார்.
இதன் முன்னர், இந்தியா சர்வதேச மரபுகளை மீறி எதிராக அணு ஆயுதங்களை உருவாக்கியதாலும், அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் (NNPT) கையெழுத்திடாததாலும் அமெரிக்கா இந்தியாவுடன் அணு ஒத்துழைப்பு எதிர்த்து வந்தது.

ஆனால், டிசம்பர் 2006 இல், அமெரிக்க காங்கிரஸ், 30 ஆண்டுகளில் முதல் முறையாக, ஹென்றி ஜே ஹைட் அமெரிக்க இந்திய அமைதியான அணு ஒத்துழைப்பு சட்டத்தை தாக்கல் செய்து, இந்தியாவிற்கு நேரடி அணு சக்தி வணிகம் செய்ய அனுமதி அளித்தது.

### போயிங் விமான கொள்வனவு:

தற்போது 2023 ஜூலையில் அமெரிக்காவின் போயிங் விமான நிறுவனத்திடம் இருந்து டாடா குழுமத்தின் ஏர் இந்தியா விமான நிறுவனம் 290 விமானங்களை வாங்க முடிவு செய்து அதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

போயிங் விமான நிறுவனத்திடம் இருந்து ஏர் இந்தியா 200க்கும் மேற்பட்ட விமானங்களை வாங்க இருப்பது குறித்து அதிபர் ஜோ பைடன் பேசுகையில் இந்த விற்பனை 10 லட்சம் அமெரிக்கர்களுக்கு வேலை வாய்ப்பை அளித்துள்ளதாக அவர் கூறினார்.

போயிங் 737 MAX ரகத்தில் 190 விமானங் களையும், போயிங் 787 ரகத்தில் 20 விமானங்களையும், போயிங் 777X ரகத்தில் 10 விமானங்களையும் ஏர் இந்தியா வாங்க உள்ளது. இந்த 220 விமானங்க ளின் மதிப்பு 34 பில்லியன் டாலராகும்.

இதுமட்டுமின்றி, போயிங் 737 MAX ரகத்தில் கூடுதலாக 50 விமானங்களையும், 787 ரகத்தில் கூடுதலாக 20 விமானங்களையும் ஏர் இந்தியா வாங்க உள்ளது. இதன் மொத்த மதிப்பு 45.9 பில்லியன் டாலராகும். போயிங் விமான நிறுவனத்திடம் இவ்வளவு எண்ணிக்கையில் விமானங்களை வாங் கும் இரண்டாவது நிறுவனம் ஏர் இந்தியா என அமெரிக்க தலைமை செய்தித் தொடர்பா ளர் ஜீன் பெர்ரி தெரிவித்துள்ளார்.

இந்திய-அமெரிக்க இடையே உள்ள பன்னாட்டு உறவை மேலும் வலுப்பெற அமெரிக்கா விரும்புவதாக அந்நாட்டின் அதிபர் ஜோ பைடன் தொடர்ந்து தெரிவித்து வருகிறார்.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**



விளம்பர தொடர்புகளுக்கு
021 221 7557
Mobile : +94 76 567 3339

# குருவுக்கு மிஞ்சிய சிஷ்யனாக இருக்காதே!



உங்கள் மேலிடம் என்றாவது ஒருநாள் விழுந்தே தீரும். அது இயற்கை நியதி ஆகையால் காத்திருங்கள், காலம் வரும்.

பிரான்ஸ் நாட்டு மன்னனான பதினான்கா வது லூயியின் அமைச்சரவையில் நிக்கோலஸ் ஃபொக்கே என்ற நிதியமைச்சர் இருந்தார். ஆடம்பரமான விழாக்கள் நடத்து வதிலும் அழகான குமரிகளை அணைப் பதிலும், கவிதை எழுதுவதிலும் படிப்பதிலும் இவருக்கு அபாரமோகம். செலவுகளுக்கு அஞ்சாமல் பணத்தை வாரியிறைப்பது இவர் வழக்கம். அதனால் மன்னனுக்கு மிகவும் நெருக்கமானவராக விளங்கினார். தன்னை விட்டால் ஆள் இல்லை என்றபடி நடந்து கொண்டார்.

அது பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதி. அப்போது பிரதம மந்திரியாக இருந்தவர் திடீர் என இறந்துபோனார். அந்தப் பதவி இனி மேல் தனக்குத்தான் என்று நிக்கோலஸ் நம் பினார். ஆனால் பிரதம மந்திரி என்ற பதவி யையே ஒழித்துவிடுவது என்று லூயி மன் னர் தீர்மானித்திருப்பது அவருக்குத் தெரிய வந்தது. மன்னருக்குத் தன்மீது நம்பிக்கை குறைந்து வருகிறதோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. ஆகவே லூயி மன்னரின் மன சைக் கவர, தான் எத்தனை பெரிய ஆள் என் பதைக் காட்டிக்கொள்ள, மாபெரும் விருந்து ஒன்றை ஏற்பாடு செய்தார். சொகுசான மாளி கையொன்றைக் கட்டினார். அதைத் திறந்து வைக்கும் சாக்கில் மன்னரை அழைத்து, உலகம் கண்டிராத விருந்து நடத்தினார்.

ஐரோப்பாவில் அப்போது பிரபலமாக இருந்த பிரபுக்கள், இலக்கிய மேதைகள், இசை - நடனக் கலைஞர்கள் அத்தனைபேரையும் இந்த விழாவுக்குக் கூப்பிட்டார். புகழ் பெற்ற நாடக ஆசிரியரான மோலியர் இந்த விழாவுக் கென்றே பிரத்யேகமாக ஒரு நாடகம் எழுதி னார் அதில் தானே நடித்தார் லூபி மன்னரை வானளாவப் புகழ்ந்து பாட்டு இயற்றப்பட்டு இசை அமைக்கபட்டு அந்த விழாவில் அரங் கேற்றப்பட்டது ஐரோப்பாவிலும் ஆசியா விலும் என்னென்ன புதுமையான உணவு வகைகள் உண்டோ அவ்வளவும் தயாரிக கப்பட்டு விருந்தினர்களுக்கும் பரிமாறப் பட்டது.

விருந்து முடித்ததும் மன்னரையும் மற்றவர் களையும் தோட்டத்துக்கு அழைத்துப் போனார் நிக்கோலஸ் நீரூற்றுகள் பீரிட்டன. வண்ண விளக்குகள் ஜொலித்து தேவலோ கமாக காட்சியளித்தது நந்தவனம் தோட்டத் தின் பாதைகளில் தானே மன்னரை அழைத் துச் சென்று விந்தை மேல் விந்தையாக உள்ள மலர்ச் செடிகளைக் காட்டினார் நிதிய மைச்சர் வேடிக்கைகள் ஆகாயத்தில் சீறிப் பூப்பூவாய் கொட்டின.
இப்படியொரு விருந்தையும் கேளிக்கை களையும் அதுவரை பார்த்ததே கிடையாது என்று வந்திருந்த அனைவரும் சொன்னார் கள் விடிய விடிய விழா நடைபெற்றது. மறு நாள் காலை லூயி மன்னரின் தனிப்படை யைச் சேர்ந்த காவல்துறை அதிகாரிகள் வந்தார்கள் நிக்கோல்ஸை கைது செய்து சிறையில் அடைத்தார்கள் மூன்றுமாத காலம் அவர் எங்கே போனாரென்றே யாருக்கும் தெரியவில்லை. பிறகு ஒருநாள் நீதிமன்றத் துக்கு அழைத்துவரப்பட்டார் அரசாங்க கஜானாவிலிருந்து கொள்ளையடித்ததாக அவர் மீது குற்றம்சாட்டப்பட்டது.நிக்கோலஸ் குற்றவாளி என்று தீர்ப்பாயிற்று பிரான்ஸ் நாட்டின் ஏதோவொரு மூலையில் பைரனீஸ் என்ற மலைப்பகுதியில் இருந்த சிறையில் அவர் அடைக்கப்பட்டார் யாரும் நெருங்க முடியாத தனிமைச்சிறை 20 வருடகாலம் அங்கேயே முடங்கிக் கிடந்து, அங்கேயே இறந்து போனார் அந்த முன்னாள் நிதிய மைச்சர் ஏன் இப்படி நடந்தது?

லூயி மன்னர் மகா அகங்காரம் பிடித்த மனிதர் தான் மட்டுமே நாட்டின் பெரும்புள் ளியாக இருக்க வேண்டுமென்று நினைத் தார் தன்னைத் தவிர வேறு யாரும் ஆடம் பரமாக இருப்பதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஆகவே, நிக்கோல ஸை தண்டித்தார்.
அடுத்து நிதியமைச்சர் பதவியை ஒரு சாதா ரண ஆளுக்கு கொடுத்தார். வந்தவர் கஞ்சத் தனமே வடிவானவர் சொந்தமாக ஒரு பைசா செலவழிக்கவில்லை கஜானா வருமானம் மொத்தமும் லூயி மன்னரிடமே போய்ச்சே ரும்படி செய்தார் அந்தப் பணத்தில் திக்கோல ஸைக் காட்டிலும் படாடோபமான மாளிகை கட்டிக்கொண்டார் லூயி நிக்கோலஸ் அமர்த்திய அதே நிபுணர்களைக் கொண்டு தனது மாளிகையையும் தோட்டத்தையும் மற்றும் நிர்மாணித்தார் நிக்கோலஸ் நடத்தி யதைவிட பலமடங்கு ஆடம்பரமான விழாக் களும் விருந்துக்களும் நடத்தினார்.

நிக்கோலஸக்கு ஏன் அந்த கதி ஏற்பட்டது தப்புக்கணக்கே காரணம் தன்னுடைய புகழ், பாபுலாரிட்டி திறமை, செல்வாக்கு இதை யெல்லாம் அறிந்தால் மன்னர் தனக்குப் பிரதம மந்திர் பதவியைத் தருவார் என்று எண்ணிவிட்டார் ஆனால் மனம் நினைத் ததே வேறு பெரிய பெரிய புள்ளிகளை யெல்லாம் நிக்கோலஸ் தன் பக்கம் இழுத் துக்கொண்டு மன்னரையே கவிழ்த்துவிடச் சதி செய்கிறார் என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட் டது. இதிலிருந்து கிடைக்கும் பாடம் என்ன வெனில்

தலைமையில் இருப்பவரைக் காட்டிலும் தான் பெரிய ஆள் என்று நீங்கள் காட்டிக் கொள்ளக் கூடாது தலைவனின் ஈகோவைப் பஞ்சர் பண்ணக்கூடாது இவன் தன்னை கவிழ்த்துவிடுவானோ என்கிற சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடாது முந்தின தினம் சாயந்தரம் திக்கோலஸ் உலகத்தின் உச்சாணிக் கொம் பில் வீற்றிருந்தார் அடுத்த நாள் காலை அதலபாதாளத்தில் வீழ்ந்திருந்தார் என்று ஞானி
வால்டேர் எழுதினார் இந்த நிதி மந்திரியைப் பற்றி ஒருதுறையில் முதல்வராக முன்னுக் குவர நீங்கள் விரும்பினால் இந்தக்கதி ஏற்படாமல் தடுத்துக் கொள்ள வேண்டும்.

இதே நூற்றாண்டில்தான் உலகப்புகழ் பெற்ற விஞ்ஞானியான கலிலியோ உயிர் வாழ்த் திருந்தார் பிழைக்கத் தெரிந்த விஞ்ஞானி இவர் என்ன செய்தார் தெரியுமா?

சின்னச் சின்ன வானசாஸ்திர உண்மை களை கண்டுபிடித்து உலகுக்கு அறிவித்தவர் இவர் அதற்காக அவரை இத்தாலிய நாட்டுச் செல்வந்தர்களும் பிரபுக்களும் பாராட்டி சிறுசிறு வெகுமதிகள் அளித்து வந்தார்கள் கலிலியோவுக்கு இது திருப்தி தரவில்லை ஒருநாள் ஜுபிடர் கிரகத்தைச் சுற்றி சந்திரன் கள் இருப்பதை இவர் கண்டுபிடித்தார். அது ரொம்ப பெரிய கண்டுபிடிப்பு, எப்போதும் தன் சாதனைகளை உடனுக்குடன் வெளியுல குக்கு அறிவித்து வந்த கலிலியோ அப்போது அதை செய்யவில்லை. தருணத்துக்காகக் காத்திருந்தார்.

அப்போது இத்தாலியில் மெடிஸி என்ற புதிய ராஜகுடும்பம் தோன்றியிருந்தது. கலிலியோ ஒரு தந்திரம் செய்தார் ஜுபிடர் என்பது ரோமானியப் புராணப்படி சக்தி வாய்ந்த தேவதை பதவியும் அதிகாரமும் நிறைந்த தேவதை மெடிஸி குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த சமயம் பார்த்து, தன் கண்டுபிடி கலிலியோ அறிவித் தார் ஜுபிடர் தேவதையே மெடிஸிக்கு ஆசி கூறி அருளியிருக்கிறது என்றார் மன்னருக்கு மூன்று சகோதரர் இருந்தார்கள் ஜுபிட சுற்றி வரும் நான்கு சந்திரன்கள் அந்த நான்கு குறிக்கிறது என்றார் ஜுபிடர் தேவதை ஒரு மேகத்தின் மீது அமர்ந்திருப்பது போலவும் அதைச் சுற்றி நான்கு சந்திரன் ஜொலிப்பது போலவும் ஒரு சின்னம் தயாரித்து அதை மெடிஸி ராஜகுடும்பத்துக்கு அர்ப்பனம் செய் தார் புதிய மன்னர் ஆஸ்தான பரவசத்தில் ஆழ்ந்தார் கலிலியோவை ஆஸ்தான ஜோதி டராக நியமித்து பொன்னும் பொருளும் வாரி வழங்கினார். அதுவரை சில்லறை செல்வந் தர்களின் தயவை எதிர்பாரத்திருந்த கலிலி யோவின் வறுமை வாழ்க்கை முடிவுக்கு வந்தது.

கலிலியோவின் கண்டுபிடிப்புக்கும் ராஜகுடும் பத்துக்கும் என்ன சம்பந்தம்“ எதுமில்லை விஞ்ஞானத்தைப் பற்றி எந்த அக்கறையும் கிடையாது அவர்களுக்கு தங்கள் பெயர் புகழ் பெருமை இதையெல்லாம் பறைசாற்றிக் கொள்ளவேண்டும் அவ்வளவுதான் பின் வானுலகத்துக் கடவுள்களுக்கு நிகரானவர் என்று கலிலியோ சொன்னது அவர்களு டைய அகங்காரத்துக்குத் தீனி போட்டது . புதிய கண்டுபிடிப்பின் பெருமை தனக்கே சேரும் என்று கலிலியோ அறிவித்திருந்தால் ஆட்சியாளர்களுக்கு கோபம் வந்திருக்கும் தங்களைவிட திறமையானவன் புத்திசாலி ,அறிவாளி வேறொருவன் இருப்பதை எண்ணிப் பயப்படுவார்கள் தங்கள் பதவிக்கு ஆபத்து என்று தீர்மானித்து கலிலியோவை ஒழித்திருப்பர்கள் எஜமானருக்கு மேலே தனக்கு அத்தவது உண்டு என்று கலிலியோ காட்டிக்கொள்ளவில்லை எல்லாருக்கும் மேலாக அந்தஸ்து உள்ளவர் கடவுளின் அவதாரம் என்று ஆட்சியாளர் வைத்தார் பலன் கிடைத்தது உயர்த்திபதவிகளும் அதிகாரமும் அடைய விரும்புவோர் மேலிடத் தைக் காட்டிலும் தான் புத்திசாலி என்று ஒருநாளும் காட்டிக் கொள்ளக்கூடாது நீங்கள் கவனம் வைத்துக்கொள்ளவேண்டிய இரண்டாவது முக்கிய விஷயம் மடத்தில் கருணை கடாட்சம் உங்கள் மீது இருப்பதை வைத்து உங்கள் இஷ்டப்படி எதுவேமா னாலும் செய்யலாம் என்று ஒருபோதும் நினைக்காதீர்கள் சரித்திரத்தைப் புரட்டினால் தங்கள் பதவி சாசுவதம் என்று தங்கள் தலையில் தாங்களே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டவர்களின் கதைகள் ஏராள மாககிடைக்கும்.
ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னால் வில் தஹிடி பொதி என்ற சக்கரவர்த்தி இருந்தார் அவருடைய பேரன்புக்குப் பாத்திரமாக விளங்கியவர் ரிக்கியூ என்பவர் சக்கரவர்த் தியின் பிரதான ஆலோசகராக இருந்த இவர், அரண்மனை வளாகத்திலேயே தனக்கு ஒரு மாளிகை கட்டிக்கொள்ளும் அளவுக்குச் செல்வாக்கு உள்ளவராகத் திகழ்ந்தார் திடீ ரென்று ஒருநாள் ரிக்கியூ கைது செய்யப்பட் டார் அவருக்கு மரண தண்டனை விதிக்கப் பட்டது. மனமுடைந்த ரிக்கியூ தண்டனைக் காக காத்திராமல் தானே தற்கொலை செய்துகொண்டார் அவருக்கு இந்தக்கதி நேர்ந்ததன் காரணம் பல நாட்கள் கழித்து வெளிப்பட்டது.
ரிக்கியூ தனக்கு ஒரு ஆளுயர சிலை செய்து கொண்டு அதை அரண்மனை வளாகத்தில் ஒரு முக்கியமான இடத்தில் சக்கரவர்த்தி அடிக்கடி பார்க்கும் இடத்தில் நிறுவிக் கொண்டார் அது மட்டுமல்ல, அந்த நாளில் சக்கரவர்த்தியின் குடும்பத்தார் மட்டுமே காலில் செருப்பு அணியலாம். சிலையில் செருப்பு அணிந்திருந்தார் ரிக்கியூ அதாவது சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த அவர். தனக்கும் ராஜ அந்தஸ்து உண்டு என்று காட்டிக்கொள்வது போலி ருந்தது. சக்கரவர்த்தியின் தயவில்தான் தனது வாழ் க்கை இருக்கிறது என்பதை மறந்துவிட்டார் ரிக்கியூ தனது பதவியும் அந்தஸ்தும் என் றென்றும் நிலையானது என்று நினைத் துவிட்டார் முன்னுக்கு வரவிரும்பும் எந்த அரசியல்வாதியும் இந்தத் தவறைசெய் யக்கூடாது. உங்கள் திறமையை வெளிக் காட்டா திருப்பது பலவீனமென்று நினைக்கா தீர்கள் பொறுமை காப்பது பலம் தரும். பலன் தரும்
மேலிடத்தின் செல்வாக்கு கொஞ்சம் கொஞ் சமாகச் சரிந்துகொண்டிருக்கிறது என்பது எப்போது தெரிகிறதோ அப்போது இரக்கம் காட்டாமல் அடியுங்கள் மேலிடம் யாருக்கும் இரக்கம் காட்டியதில்லை என்பதை ஞாபகத் தில் வைத்துக்கொண்டு, தாட்சண்யம் பாராமல் அடியுங்கள். அவர் பலவீனம் அடையும் சமயத்தில் அந்த வீழ்ச்சியை விரைவுபடுத்துங்கள் அவரைக்காட்டிலும் நீங்கள் கெட்டிக்காரர் அறிவாளி திட்டமி டுவதில் நிபுணர் என்று வெளிப்படுத்திக் கொள்ள அதுவே சமயம்.
உங்கள் மேலிடம் என்றாவது ஒருநாள் விழுந்தே தீரும். அது இயற்கை நியதி ஆகையால் காத்திருங்கள், காலம் வரும்.

# ஈழ தேச விடியலுக்கு வித்தான தொப்புல் கொடி உறவுகள்!







ஈழத்தில் 2009 ல் சிங்களப் பேரினவாதம் கொத்துக்கொத்தாக ஈழத்தமிழர்களை கொன்று குவித்த போது அதை கண்டு தாங்கமுடியாத துயரத்தில் அப்போரினை நிறுத்தக் கோரியும் அதன் பின்னர் ஈழத்தமிழரின் விடுதலை வேண்டி தங்கள் இன்னுயிரை நெருப்பில் ஆகுதி ஆக்கி வீரச்சாவு அடைந்த தமிழகத் தொப்புள் கொடி உறவுகளுக்கு வீர வணக்கம்

**அ தமிழ் தேசியப் பண்பாட்டுப் பேரவை**


























# ஈழத் தமிழர் கலாசாரம் என்னை மாற்றியது!

## நடிகை ரம்பா யாழில் நெகிழ்ச்சிப் பேட்டி



சொர்ணலிங்கம் வர்ணன்

கனடாவில் வாழ்கின்ற யாழ்ப்பாண ஈழத்தமிழர்களின் கலாச்சாரம் என்னையும் சேலை கட்டிப் பூ வைக்கும் பெண்ணாக மாற்றியது என தென் இந்திய பிரபல நடிகை ரம்பா இந்திரகுமார் யாழ்பாணத்தில் உள்ள மின்னிதழ் ஒன்றுக்கு கடந்த வருட இருதியில் வழங்கிய கேள்வி பதில் நிகழ்ச்சியில் இவ்வாறு தெரிவித்தார் .

**கேள்வி...** நடிகை ரம்பாவாக சினிமா துறையில் சாதிக்காத விடையங்கள் என்ன ?

**பதில்...**பதின் மூன்று வயதில் சினிமா துறைக்கு வந்தேன் சினிமாவில் சாதிக்காத விடையங்கள் என ஒன்றுமில்லை.

தென்னிந்தியா சினிமா துறையில் பிரபல நடிகர்கள் அனைவருடனும் பல்வேறு பட்ட கதாபாத்திரங்களுடன் நடித்துள்ளேன் எதிர்பார்த்த விடயங்கள் அல்லது நிறைவேறாத விடையங்கள் என எந்த ஒரு எதிர்பார்ப்பும் சினிமா துறையில் நான் விட்டு வைக்கவில்லை.

**கேள்வி...**சினிமா துறையில் பிரவேசிக்கும் போது நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் என்ன?

**பதில்...** தற்போதைய தென்னிந்திய சினிமாவுக்கும் நாங்கள் சினிமாவுக்கு வந்த காலத்துக்கும் பல வித்தியாசங்கள் உள்ளது.

நான் படப்பிடிப்புக்கு செல்லும்போது நெருங்கின உறவினர்கள் அல்லது அம்மாவுடன் தான் வெளிநாட்டு அல்லது உள்ளூாரில் நடைபெற்றாலும் செல்வது வழமை.

ஆனால் தற்போது நடிகைகளின் தன்னந்தனியாகவே எவ்வளவு நாட்கள் ஆனாலும் படப்பிடிப்புக்கு செல்கின்றார்கள்.

அது மட்டுமல்லாது படப்பிடிப்புக்கு செல்லும் காலப்பகுதிகளில் நாங்கள் தொலைபேசிகள் பாவிப்பது தடை செய்யப்பட்டது யாருடனும் பேச வேண்டும் என்றால் அவ்வளவு எளிதாக பேசிக் கொள்ள முடியாது ஆனால் தற்போது படப்பிடிப்பு காலங்களில் தொலைபேசி பாவிப்பது சாதாரணமாக இடம் பெறுகிறது.

**கேள்வி..**உங்கள் காலத்தில் நடிகையாக சினிமாவுக்குள் நுழைவதற்கும் தற்போது சினிமா துறைக்கு நுழைவதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?

**பதில்..** எங்களுடைய காலத்தில் சினிமா துறைக்கு நுழைவதற்கு வாய்ப்புகள் பெரிதாக இல்லை கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எமது அதிகபட்ச திறமையை வெளிப்படுத்துவதன் மூலம் வாய்ப்புகளை எமக்காக உருவாக்கிக் கொண்டோம்.

அக்கால பகுதியில் சமூக ஊடகங்களின் வளர்ச்சி குறைவான காலப்பகுதி ஆனால் தற்போது ஒரு பெண் சினிமா துறையில் வாய்ப்பைப் பெற வேண்டுமானால் முகநூல் ,யுரியுப் இன்ஸ்டாகிராம் தமது திறமைகளை தாங்களாக வெளிப்படுத்துவதன் மூலம் வாய்ப்புகளை உருவாக்குகிறார்கள்.

**கேள்வி..**உங்கள் திருமணம் காதல் திருமணமா? அல்லது நிச்சயிக்கப்பட்ட திருமணமா?

படப்பிடிப்பில் அதிக நாட்கள் செலவிடுவதால் காதலிக்க நேரம் கிடைப்பதில்லை திருமணத்திற்கு பின் இற்றவரையும் எனது கணவரை காதலித்துக் கொண்டிருக்கிறேன்.

இந்திரஜித் தென் இந்திய சினிமா துறையில் இயக்குனர்களுடன் நெருங்கிய உறவை கொண்டவர் நான் படப்பிடிப்புக்கு சென்ற சில சமயங்களில் அவரும் படப்பிடிப்பில் கலந்து கொண்டிருக்கிறார் அக் காலப்பகுதிகளில் என்னுடன் பேசியதில்லை.

இந்திரஜித் என்னை திருமணம் செய்வதற்காக இயக்குனர் ஒருவரிடம் சம்மதத்தை கேட்டு சொல்லும்படி கூறினார் அந்த இயக்குநர் மூலம் இந்திரஜித் யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்தவர் கனடாவில் தொழிலதிபராக இருக்கிறார் போன்ற விடயங்களை அறிந்து கொண்டேன்.

அதன் பின்னர் இருவரும் வீட்டாரிடம் திருமணத்திற்கு முன் என்ன விடயங்களை செய்வார்களோ அதவது பேச்சு வார்த்தைகளை இடம்பெற்று இந்து முறைப்படி எமது திருமணம் இடம் பெற்றது.

**கேள்வி..** தொழிலதிபர் இந்திரஜித்தை திருமணம் செய்ததால் நீங்கள் அடைந்த பெருமை என்ன?

**பதில்...**நான் முன்பு கூறியது போல் சினிமா தான் வாழ்க்கையை என நினைத்த எனக்கு எனது திருமண வாழ்க்கை மூலம் கிடைத்த கணவர் பிள்ளைகள் மூலம் பல விடயங்களை கற்றுக் கொண்டுள்ளேன் தற்போதும் எனது கணவரிடம் கற்றுக் கொண்டிருக்கிறேன்.

எனது கணவர் தொழிலதிபராக அடிக்கடி பல நாடுகளுக்கு சென்று வருவார் ஆனால் குடும்பம் என்ற அந்தஸ்சை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவர்.

எனக்கு கணவராகவும் வழிகாட்டியாகவும் பிள்ளைகளுக்கு வழிகாட்டும் அப்பாவாக அவர்களுக்கு தேவையான விடயங்கள் எனக்கு தேவையான விடயங்கள் எல்லாவற்றையும் வெளியூரில் இருந்தாலும் நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பார்.

நான் பிள்ளைகளுடன் அதிக நேரம் செலவிடுவேன் பிள்ளைகளை கல்விக்காக அழைத்துச் செல்வது பொழுதுபோக்குக்காக அழைத்துச் செல்வது எனக்கு விருப்பமான விடயம் அவர்களுக்கு தேவையான உணவுகளை நானே சமைத்துக் கொடுப்பேன்.

**கேள்வி..** உங்கள் கணவர் இந்திரஜித் இலங்கையில் அதுவும் யாழ்ப்பாணத்தில் Nothan uni என்ற தனியார் உயர் கல்வி நிறுவனத்தை நிறுவியதன் நோக்கம் என்ன?

**பதில்...** அவர் யாழ்ப்பாணத்தில் Nothan uni என்ற உயர் கல்வி நிறுவனத்தை நிறுவியதன் மூலம் எனது ஆசையை நிறைவேற்றினார் என்றை கூறுவேன்.

கனடாவில் கல்விக்காக எனது பிள்ளைகளை நானே அழைத்துச் செல்வேன் ஒரு முறை எனது கணவரிடம் கேட்டேன் எமது பிள்ளைகளை கல்விக்காக இன்னுமோர் இடத்திற்கு அழைத்துச் செல்கிறேம் நாங்கள் ஒரு கல்வி நிறுவனத்தை ஆரம்பித்து மற்றவர்களுக்கு கல்வியை வழங்கினால் நல்லதே என கணவரிடம் கூறினேன்.

அவர் அப்போது பதில் கூறவில்லை நான் கூறியதை மனதில் வைத்துக் கொண்டு யாழ்ப்பாணத்தில் உயர் கல்வி நிறுவனம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்தார் என்னிடம் அதை பற்றி எதுவுமே தெரிவிக்கவில்லை இலங்கை செல்வதாக கூறிச் சென்றார்.

இலங்கையிலிருந்து கனடாவுக்கு திரும்பி வந்த போது ஒரு படத்தை என்னிடம் காண்பித்தார் இது எப்படி இருக்கிறது என கேட்டார் நான் நன்றாக இருக்கிறது என்ன



இது என கேட்டேன்.

நீ உயர் கல்வி நிறுவனம் ஒன்று ஆரம்பித்தால் என்ன என கேட்டாய் இதுதான் அந்த படம் எவ்வாறு இருக்கிறது சந்தோஷம் தானே என கேட்டார்.

படத்தை பார்த்ததும் கணவரிடம் கேட்டேன் படத்தில் உள்ளது போன்று உயர் கல்வி நிறுவனம் அமையுமா என கேட்டேன் ஒரு வருடத்தில் திறப்பு விழாவுக்கு உன்னையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு நேராக காட்டுகிறேன் என கூறினார்.

அதே போன்று யாழ்ப்பாணம் அழைத்து வந்தபோது இந்த உயர் கல்வி நிறுவனத்தை படத்தில் பார்த்தது போன்று அப்படியை அழகாக இருப்பதைக் கண்டு வியந்தேன்.

**கேள்வி..**யாழ்ப்பாணத்தை கண்டபோது உங்கள் மனதில் பற்றி கொண்ட விடயம் என்ன?

**பதில்..** யாழ்ப்பாண தமிழ் மக்களின் கலாச்சாரம் எனக்கு நன்றாக பிடிக்கும் தலையில் பூ வைத்து கோயிலுக்கு செல்வது சேலை கட்டுவது எனக்கும் நன்றாக பிடிக்கும்.

கனடா அதிக நாட்கள் குளிராக உள்ள ஒரு நாடு இருந்தாலும் கனடாவில் வசிக்கின்ற யாழ்ப்பாணத்துப் பெண்கள் அதிகாலையில் தலையில் நீராடி குளிர் காலத்திலும் ஆலயத்திற்கு சேலை கட்டிச் செல்வார்கள் அது எனக்கு ரொம்ப பிடிக்கும்.

**கேள்வி..**இறுதியான கேள்வி உங்கள் எதிர்கால வாழ்க்கை எந்த நாட்டில்?

**பதில்..** மூன்று பிள்ளைகளும் கனடா நாட்டில் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் பாடசாலை கல்வியைக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள் .

எந்த நாட்டில் தனது மனைவி பிள்ளைகள் வாழ்வது நல்லது என கணவர் இந்திரஜித் விரும்புகிறாரோ அந்த நாட்டில் வாழ்வது எனக்கு விருப்பம்.

எங்கு செல்ல வேண்டுமானாலும் விமான மூலம் பறந்து செல்வதால் எங்களுக்கு பணம் ஒரு தடை அல்ல எனது கணவரின் வழிகாட்டுதலில் மகிழ்ச்சியான வாழ்க்கையே வாழுகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்...

# ஈழத்தமிழரது மக்கள் இறைமையும் தமிழ் பொது வேட்பாளரும்!

காஸா இன்னோர் முள்ளிவாய்க்கால் என்பதற்கான சாட்சியங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. ஓரினத்தின் அழிவு அந்த இனத்தின் விடுதலைப் போராட்டத்தின் சிதைவாக கருதும் உலகளாவிய சக்திகளின் பிடிக்குள் விடுதலை கோரும் தேசியங்களின் இருப்பு சுருங்கியுள்ளது. அதனையும் கடந்து ஓரினம் விடுதலை பெறுவதென்பது உலகளாவிய வல்லாதிக்க சக்திகளின் நலனுக்குள் தங்கியுள்ளது என்பது கிழக்கு ஐரோப்பா முதல் ஆபிரிக்க கண்டத்தில் கண்டுகொள்ள முடிகிறது. ஈழத்தமிழர் நீண்ட அகிம்சைப் போராட்டத்தையும் ஆயுதப் போராட்டத்தையும் நிகழ்த்தினார்கள். ஆனால் உலகம் அதனை தென்னிலங்கை ஆட்சியும் அதன் அரச இயந்திரமும் குறிப்பிடுவது போல் பயங்கரவாதம் என முத்திரை குத்தியுள்ளது. ஏறக்குறைய இலங்கை, இந்தியா, மலேசியா ஆகிய 3 நாடுகளில் விடுதலைப் போராட்ட அமைப்பு தடை என்பதற்கு அப்பால் விடுதலைக்கு போராடுவதே தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே 30 நாடுகளில் ஐரோப்பிய யூனியன் மற்றும் கனடா. அமெரிக்கா உட்பட விடுதலைப் போராட்ட அமைப்பு தடைசெய்யப்பட்டுள்ளது. ஓரமைப்பு தன்னை போராட்டத்திலிருந்து மௌனித்துக்கொண்ட பின்னரும் தடை செய்யப்பட்டுள்ளது என்பது ஈழத்தமிழரது போராட்டத்திலேயே நிகழ்ந்துள்ளது. இத்தகைய தருணத்திலிருந்து ஈழத்தமிழர் எப்படி மீள்வது என்பதே இக்கட்டுரையின் கருப்பொருளாகும்.

ஈழத்தமிழர் மீது ஏற்படுத்தப்பட்டபயங்கரவாதம் என்பதிலிருந்து எப்படி வெளியே வருவதென்பதே முக்கியமானது. அதற்காக எதிரியிடம் சரணடைய முடியாது. எதிரியிடம் சரணடைவதென்பது ஈழத் தமிழரது அரசியல், சமூக, பொருளாதாரண்பாட்டின் இருப்பு அனைத்தையும் இழப்பதாகும். நிலமும் மக்களுமே ஓரினத்தின் இருப்பாகும். அதனை இழக்கும் போது தேசிய இனத்தின் அடையாளம் இல்லாது போவதுடன், ஏனைய தேசியங்களுக்குள் கரைந்து போகும் அபாயம் ஈழத் தமிழருக்கு ஏற்படும். அதனைவிடுத்து இத்தகைய நெருக்கடியிலிருந்து எப்படி தப்பிக்கொண்டு தேசியத்தைக் காத்து, நிலத்தையும் மக்களையும் பாதுகாப்பது என்பது கருத்தில் கொள்ளவேண்டிய விடயமாகும். அதற்கான ஒரு வாய்ப்பு ஈழத்தமிழருக்குக் கிடைத்துள்ளது. அதுவே ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களுக்கான ஒரு பொது வேட்பாளர். அதனைவிரிவாக தர்க்க ரீதியிலும் கோட்பாட்டு அடிப்படையிலும் புரிந்துகொள்ள வேண்டும். ஈழத்தமிழர் சட்டரீதியிலும் உலகளாவிய நியதிக்குள்ளும் அங்கீகரிக்கப்பட வேண்டும். இலங்கைத் தீவை பிரிவினைக்குள்ளாக்குவதென்பது தென்னிலங்கையினால் மட்டுமல்ல இந்தியாவாலும் அமெரிக்காவாலும் ஐரோப்பிய நாடுகளாலும் ஏற்றுக்கொள்ள முடியா ததொன்றாகவே உள்ளது. தற்போது பலஸ்தீனத்திற்கு ஒரு தனிநாடு வேண்டும் என்ற கருத்தில் ஒரு சதவீதத்தை யேனும் ஈழத்தமிழருக்காக உலகிலுள்ள எந்த நாடும் கொண்டிருக்கவில்லை என்பது நிதர்சனமாகும். இந்த யதார்த்தத்தை ஈழத்தமிழர் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் உலகளாவிய அங்கீகாரத்தைக்கொண்ட சுயநிர்ணயத்தையும் அதற்கமையான தேசியத்தையும் ஏற்றுக்கொள்வதுடன், சமஷ்டிக்குரிய நியதிகளை தென்னிலங்கை தவிர்ந்த ஏனைய உலக நாடுகள் முதன்மைப்ப டுத்த தயாராக உள்ளன. அதற்கான வாய்ப்புகளை எல்லாக் காலத்திலும் ஈழத்தமிழர்கள் பரிசீலித்துப் பார்த்துள்ளனரே




அன்றி, அதற்கான அரசியலை முன்னெடுத்ததாக தெரியவில்லை. அதற்காக போராடியதாகவும் தெரியவில்லை.

ஒரு தேசிய இனம் என்பது சுயநிர்ணயத்தைக் கொண்டதாகவே கருதும் அறிவியல்உலகப் பரப்பில் உண்டு. அதனுடன் அத்தகைய தேசிய இனத்திற்குஇறைமை உண்டு என்பதுவும் அதுவே மக்கள் இறைமை )Popular Sovereignty) உலகளாவிய தளத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஈழத்தமிழர்கள் இறைமை கொண்ட, தேசிய இனமாக அடையாளப் படுத்தப்படும் மக்களாக உள்ளனர். இலங்கைத் தீவுக்குள் ஈழத்தமிழர் மக்களாக இருப்பதென்பது உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டதொன்றாகும். அதற்கான காரணம் ஈழத்தமிழரது திரட்சியான இருத்தலேயாகும். அத்தகைய திரட்சியை உறுதிப்படுத்தியதில் வட்டுக்கோட்டைத் தீர்மானமும் ஒன்றாகும். தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் செல்வநாயகம் வடக்கு, கிழக்கு தமிழர்களின் பூர்வீக நிலத்தையும் தமிழர்களையும் ஒன்றிணைத்து ஒரு தேசிய இன அடையாளத்தை ஏற்படுத்தியிருந்தார். அத்தகைய தேசிய இனத்தின் திரட்சியையே மீளவும் சமகாலத்தின் தேவைக்கு அமைவாக வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு ஈழத்தமிழருக்கு உள்ளது. அத்தகைய வெளிப்பாட்டை இலங்கை அரசாங்கம் ஜனாதிபதித் தேர்தல் மூலம் ஏற்படுத்தித் தந்துள்ளது. அதனை புத்திபூர்வமாக பயன்படுத்த வேண்டிய தேவை ஈழத்தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் பல கேள்விகள் எழுப்பப்படுகின்றன. ஆனால் அத்தகைய கேள்விகள் எல்லாக் காலமும் உண்டு. சில எழுப்பும் கேள்விக்குள்ளேயே விடைகளும் உண்டு. இது ஒரு பிரகடனத்திற்கு வாக்களித்தலாகும். இதனால் எந்த நபரும் வெற்றியடையப் போவதில்லை. இது ஈழத்தமிழர் மீதுள்ள சவால்களை எதிர்கொள்ளுதலாகும். இதற்காக அளிக்கப்படும் வாக்கு வேட்பாளருக்கானதல்ல. பிரகடனத்திற்கானது. வட்டுக்கோட்டைத்தீர் மானம் உணர்ச்சிவசப்பட்டு எனக்கருதும் சூழலில் அதனை புத்திபூர்வமாநோக்கும் நிலை அவசியமானதாகத்தெரிகிறது. அது ஒரு தேசிய இனத்தின் பிரகடனம். அதனை முன்வைத்தவர்கள் மாவட்ட அபிவிருத்தி சபைக்கு உடன்பட்டமையே உணர்ச்சிவசப்பட்ட தமிழ் இளைஞர்களை தோற்றுவித்தது என்பது யாராலும் மறுக்க முடியாது. தென்னிலங்கையிலுள்ள வேட்பாளர்கள் வெளிப்படையாகவும் வரமாட்டார்கள், கனவான உடன்படிக்கைசெய்தாலும் கிளித்து எறிந்துவிடுவார்கள். அப்படியாயின் தற்போதுள்ள அரசியலை வேடிக்கை பார்ப்பதை விடுத்து வேறு ஏதும் செய்ய முடியாத நிலையே ஏற்படும். அரசியல் என்பது வேடிக்கை பார்ப்பதல்ல. யதார்த்தத்தை கையாளுவதுதான் அரசியல் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இரண்டாவது விருப்பத் தெரிவை தென்னிலங்கை வேட்பாளருக்கு வழங்குமாறு கோருவது தென்னிலங்கை வேட்பாளரை தோற்கடித்துவிடும் எனக் கருதுகிறீர்களே அன்றி தமிழரது அரசியலுக்கு என்ன அடுத்த நகர்வென கருத யாரும் தயாராக இல்லை.

தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களித்தால் அவர் அந்த வாக்கைக் கொண்டு ஏதாவது செய்துவிடுவார் எனக் கருதுகிறீர்களே அன்றி, அந்தவாக்கு ஈழத்தமிழரது அரசியல் இருப்புக்கான மக்கள் இறைமை என்பதை புரிந்துகொள்ள முடியாதவர்களாக அல்லவா கேள்வி எழுப்புகிறீர்கள். ஜனாதிபதித் தேர்தலில் குமார் பொன்னம்பலம் வேட்பாளராக நின்று பெற்றவாக்குகள் அவரது மரணத்துடன் மறைந்துவிட்டதா? அல்லது காணாமல் போய்விட்டதா?

ஈழத்தமிழருக்கு ஒரு சிறந்த வாய்ப்புகிடைத்துள்ளது. ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி அவர் மூலம் ஆணையை தமிழ்மக்கள் அடைய முடியும். அத்தகைய ஆணை ஈழத்தமிழருக்கான பொது வாக்கெடுப்பாகும். இதனை எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கை அரசாங்கம் ஈழத்தமிழர் தனித்து மேற்கொள்ள அனுமதிக்காது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.ஆனால் ஜனாதிபதித் தேர்தல் மூலம் அத்தகைய வாய்ப்பொன்று கிடைத்துள்ளது. அதனை பயன்படுத்திப் பார்ப்பதில் எத்தகைய தீங்கும் தமிழினத்திற்கு ஏற்படப்போவதில்லை. அரசாங்கம் முன்வைத்துள்ள தேர்தல் முறைமையிலேயே பொது வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் பொது வாக்கெடுப்பொன்றையும் நடத்திக் காட்டமுடியும். குறிப்பிட்ட காலம் முயன்று தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து 90 சதவீதமான வாக்குகளையும் அந்த வேட்பாளர் பக்கம் திருப்பி ஒரு முடிவை எட்டினால் தென்னிலங்கையால் மட்டு மல்ல உலகளாவிய ரீதியில் விதிக்கப்பட்டுள்ள தடைகளையும் பயங்கரவாதம் என்ற பெயரையும் தகர்க்க முடியும். தமிழ் மக்கள் என்றும் திரட்சியாகவே உள்ளனர் என்பதையும் தேசிய இனமாகவே இயங்குகிறார்கள் என்பதையும் வெளிப்படுத்த முடியும். ஈழத்தமிழர் கட்சிகளாகத்தான் பிரிந்திருக்கிறார்களே அன்றி, மக்களாக இல்லை என்பதை புரிந்துகொள்ளுங்கள். கட்சிகளின் நலன்களுக்கும் தனிப்பட்ட

**“ ஈழத்தமிழருக்கு ஒரு சிறந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி அவர் மூலம் ஆணையை தமிழ் மக்கள் அடைய முடியும். அத்தகைய ஆணை ஈழத் தமிழருக்கான பொது வாக்கெடுப்பாகும். இதனை எந்த சந்தர்ப்பத்திலும் இலங்கை அரசாங்கம் ஈழத்தமிழர் தனித்து மேற்கொள்ள அனுமதிக்காது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால் ஜனாதிபதித் தேர்தல் மூலம் அத்தகைய வாய்ப்பொன்று கிடைத்துள்ளது. அதனை பயன்படுத்திப் பார்ப்பதில் எத்தகைய தீங்கும் தமிழினத்திற்கு ஏற்படப் போவதில்லை ”**

விருப்புகளுக்கும் நீர்த்துப்போனகொள்கை பேசுவது அரசியல் கட்சிகளே அன்றி தமிழ் மக்களல்ல. உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மாகாண சபைகளுக்கும் பாராளுமன்றத்திற்கும் தமிழ் மக்கள் கட்சி களுக்கு வாக்களிக்க வேண்டும். ஆனால் ஜனாதிபதித் தேர்தலுக்கு பகிஷ்கரிக்க வேண்டும். ஏன்? இதில் கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றிபெற முடியாது. இது தான் கட்சி அரசியல். இன்னோர் கட்சியினர் தாம் காட்டும் தென்னிலங்கை வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும். ஏன்? தங்கள் தனிப்பட்ட தேவைகள் அந்த தென்னிலங்கை வேட்பாளரிடமிருந்து பெறவேண்டும். இதுவே தமிழர் கட்சி அரசியல்.

எனவே போலியான உரையாடலைகை விட்டு விட்டு ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி தமிழ் மக்களது வாக்குகளை திரட்சிபெறச் செய்வது அவசியமானது. போரில் காலை இழந்துவிடுதல் என்பது இழப்புத்தான். அது இன்னோர் பரிமாணம் என்று கூறிவிட்டு இழப்பீட்டை சரிசெய்ய முடியாது. அதனை இன்னோர் வளர்ச்சி என்று கூறிவிடவும் முடியாது. தோல்வியின் அனுபவத்திலிருந்துதான் இன்னொன்றை கட்ட முடியும். தோல்வியை தோல்வி எனக் கருதாத சமூகம் அதிலிருந்து மீள்வது கடினம். கடந்தகால சிந்தனைக்குள்ளால் சமகாலத்தின் போக்குகளை அளவிடாதீர்கள். கடந்தகால அனுபவத்திலிருந்து சமகாலத்தை கணிப்பிடுவது அவசியமானது.

**பேராசிரியர் கே.ரீ. கணேசலிங்கம்**

நன்றி தினக்குரல்



அ. கிருபாகரன்
- அதிபர் -

அரச அங்கீகாரம் பெற்ற வடமாகாணத்தின் முதல்தர கனரக வாகனப் பயிற்சிப் பாடசாலை...

# கிருபா லேணர்ஸ்

## කිරුබා ලෑර්නර්ස් KIRUBAA LEARNERS

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி
- மும்மொழிகளிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறையில் கட்டணங்கள்.
- இரவிலும் வாகனப் பயிற்சிகள்.



We are a government Approved fully qualified "A" Grade driving school in Sri Lanka.

**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
0777 22 5292

**சுன்னாகம்** 021 224 2022

**நெல்லியடி** 021 226 0700

**பருத்தித்துறை** 021 226 1100

**ஆவரங்கால்** 021 222 6688

**சித்தங்கேணி** 021 225 2500

**சாவகச்சேரி** 021 227 0700

**பூநகரி** 021 320 1818

**முழங்காவில்** 021 300 6544

**விஸ்வமடு** 021 320 1515

**மன்னார்** 023 225 1656

**கிளிநொச்சி** 021 228 5505

**வவுனியா** 024 222 7777








இப்பத்திரிகை 25.01.2024 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படுகிறது.